## பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி


02.04.2019 புனித பிரான்சிஸ் - திருப்பலி 02

07.04.2019 தவக்காலம் ஐந்தாம் ஞாயிறு - திருப்பலி 03

11.04.2019 புனித ஸ்தனிஸ்லாஸ் - திருப்பலி 04

13.04.2019 புனித முதலாம் மார்ட்டின் - திருப்பலி 05

14.04.2019 குருத்து ஞாயிறு - திருப்பலி 06

18.04.2019 ஆண்டவரின் இரவு உணவு- திருப்பலி 08

19.03.2019 பெரிய வெள்ளி: திருச்சிலுவை ஆராதனை - வழிபாடு 09

20.04.2019 பெரிய சனி: இரவு பாஸ்கா திருவிழிப்பு - திருப்பலி 10

21.04.2019 உயிர்ப்பு பெருவிழா - திருப்பலி 12

25.04.2019 புனித மாற்கு நற்செய்தியாளர் - திருப்பலி 13

28.04.2019 உயிர்ப்புக் காலம் இரண்டாம் ஞாயிறு - திருப்பலி 14

28.04.2019 இறை இரக்கத்தின் பக்தி - செபவழிபாடு 16

30.04.2019 புனித ஐந்தாம் பயஸ் - திருப்பலி 17


## பகுதி 2: விசுவாசத்தில் வளர...


1. நம் வாழ்வில் இயேசுவின் உயிர்ப்பு 18
2. புனித ஐந்தாம் பயஸ் - வாழ்வு தரும் பாடம் 21
3. புனித மாற்கு கண்ட இயேசுவின் சுவடுகள் 23
4. திருச்சபைச் செய்திகள் 26

# பகுதி 1: வழிபாட்டு வழிக்காட்டி

## 02.04.2019 புனித பிரான்சிஸ் திருப்பலி

**முன்னுரை**

திரு. பிரான்சிஸ் அலாய்சியஸ்

அன்புமிக்க சகோதர சகோதரிகளே, இன்று நாம் பவோலா நகர் புனித பிரான்சிஸ் அவர்களின் நினைவு நாளைச் சிறப்பிக்கின்றோம். இப்புனிதரின் பெற்றோர்கள் குழந்தைப் பாக்கியமின்றி சமூகத்தின் முன்பு இகழ்ச்சிக்குரியவர்களாக வாழ்ந்து வந்தார்கள். அப்போது புனித பிரான்சிஸ் அசிசியாரிடம் குழந்தைப் பேற்றிற்காக மன்றாடினார்கள். அந்த புனிதரின் ஆசிரால் 1416ம் ஆண்டு இத்தாலி நாட்டில் உள்ள பவோலா என்ற இடத்தில் இந்தப் புனிதர் பிறந்தார். இவரது பெற்றோர்கள் இவருக்கு பிரான்சிஸ் என்று பெயரிட்டார்கள். இவர் பிறந்தபோதே ஒரு கண் பார்வையின்றிப் பிறந்தார். மீண்டும் இவரது பெற்றோர்கள் புனித பிரான்சிஸ் அசிசியாரிடம் குழந்தை பிரான்சிஸிக்குப் பார்வைக் கிடைக்கும் படியாகவும், பார்வை கிடைத்தவுடன் நன்றியாக ஓராண்டு முழுவதும் துறவு ஆடை அணிவித்து வாழச்செய்வோம் என்றும் நேர்ச்சை நேர்ந்தார்கள். புனிதருக்கு கண் பார்வைக் கிடைத்தது. பெற்றோரின் நேர்ச்சையை நிறைவேற்ற புனிதர் 13வயதில் துறவற மடத்திற்குச் சென்று தமது செபம், பிறரன்பு மற்றும் ஒழுக்கம் நிறைந்த வாழ்க்கையால் இறைவனுக்கு ஏற்புடையவரானார். "சிறியோரின் சபை" என்ற துறவற சபையை ஆரம்பித்தார்.

இவர் பிற்காலத்தில் நடக்க இருப்பதை முன்கூட்டியே சொல்லும் அருளைப் பெற்றிருந்தார். தேவமாதாமீது அதிக பக்தி கொண்டிருந்தார். கொள்ளை நோயைத் தடுத்தார், திருத்தந்தைக்குக் கீழ்ப்படிந்து பிரான்ஸ் நாட்டிற்குச் சென்று பேரரசர் 11ம் லூயிஸ் அரசரின் நல் மரணத்திற்குத் தயாரித்தார். நாம் தவம் செய்வோமானால், கடவுள் நம் பாவநாட்டங்களை அடக்குவார் என்று கூறிய புனிதர், திருப்பாடுகளின் வெள்ளியன்று, இயேசுவின் பாடுகளை வாசிக்கச் சொல்லி, அதைக்கேட்டுக்கொண்டே 1507ம் ஆண்டு இறந்தார். திருத்தந்தை 10ம் சிங்கராயர் 1519ல் இவரை புனிதராக உயர்த்தினார். கருத்தரிக்க இயலாதவர்களின் பாதுகாவலர் என்றும் இவர் அழைக்கப்படுகிறார்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. படைப்புகளின் பரமனே எம் இறைவா, உமது திருவுளத்தை இந்த அகிலமெங்கும் அறிவிக்கும் எம் திருஅவையை ஆசீர்வதித்து, எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் மற்றும் பொதுநிலையினர் உமது ஞானத்தில் வளர்ந்து, அறிவாற்றலுடன் எங்களை வழிநடத்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. அன்புத் தெய்வமே எங்கள் இந்திய திருநாட்டை ஆளும் குடியரசுத்தலைவர், பாரதப்பிரதமர், நாட்டின் முதலமைச்சர்,

பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களாகிய இவர்களைத் தீயச் சிந்தனைகள், எதுவும் அணுகாமல், அவர்கள் மக்களின் வாழ்வின் மேன்மையை உணர்ந்து கடமையாற்றிட வேண்டிய நல்ல ஞானத்தைத் தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. அன்புத் தந்தையே இறைவா, பவோலா நகர் புனித பிரான்சிஸ் அவர்களின் நினைவைச் சிறப்பிக்கும் நாங்கள், கருத்தரிக்க இயலாத தம்பதியருக்காகச் சிறப்பாக செபிக்கின்றோம். ஆண்டவரே நீரே அவர்களுக்கு ஆறுதலாய் இருந்து தேற்றிடவும் குழந்தைப் பாக்கியத்தை அளித்து காத்திடவும் வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 07.04.2019 தவக்காலம் 5ஆம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திருமதி. ராணிசம்பந்தன்

I. எசா 43: 16-21 II. பிலி. 3: 8-14 யோவா 8: 1-11

இன்றைய வாசகங்கள் அனைத்தும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் அன்பிலும், புகழிலும் நிலைத்திருக்கவும், நம்மை நாமே சுயஆய்வு செய்துகொள்ளும் மனநிலை பெறவும் நமக்கு அழைப்பு விடுக்கின்றன. இறைவாக்கினர் எசாயா தம் நூலில் அடிமை வாழ்விலிருந்து நம்மை விடுவித்தவரும், பாலைநிலத்தின் பாதையில் நம்மைக் காத்தவரும், தேர்ந்தெடுக்கப்பட்ட நமக்காகப் பல வழிகளைக் காட்டியவருமான ஆண்டவரைப் புகழ்ந்துரைத்துப் போற்றிப் பாட அழைக்கிறார். புனித பவுல் தன் திருமுகத்தில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே தான் பெற்ற ஒப்பற்றச் செல்வம் எனவும், மற்றதெல்லாம் குப்பையெனக் கருதுவதாகவும், உயிர்த்தெழும் வல்லமையில் இறந்தோருடன் தானும் உயிர்த்தெழ கிறிஸ்துவின் மூலம் கடவுள் தனக்கு அழைப்பு விடுவதையே பெரும் பரிசாகக் கருதுகிறேன் எனவும் கூறுகிறார். புனித யோவான் தன் நற்செய்தியில் இயேசு பாவத்தை வெறுப்பவராக இருந்தபோதிலும் விபச்சாரத்தில் பிடிப்பட்ட பெண்ணைத் தண்டிக்காமல் "இனி பாவம் செய்யாதே" என்று மன்னிக்கிறார். ஆகவே இறைமக்களாகிய நாமும் பிறரின் குற்றத்தைப் பெரிதுப்படுத்திக் கூறாமல் நம்மையே சுய ஆய்வு செய்து கடவுளின் அன்புக்கு நாம் தகுதியுடையவர்கள் தானா என்ற சிந்தனையுடன் இத்திருப்பலியில் இணைவோம்.

### நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. விண்ணகத் தந்தையே இறைவா, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், கர்தினால்கள், குருக்கள், இருபால் துறவியர், பொதுநிலையினர் ஆகியவர்கள் தங்களின் பொறுப்புணர்ந்து இயேசுவின்மீது நம்பிக்கைக் கொண்டு பிறருக்கு முன்மாதிரியாய் தூயதொரு வாழ்வை வாழ்ந்து விண்ணகமடைய அருள்புரியுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

2. அருளைப் பொழியும் இறைவா, பொறுப்பற்ற வழிகாட்டிகளால் ஏற்படும் பலவித குழப்பங்கள், கருத்து வேறுபாடுகள் இவற்றிலிருந்து வெளிவர

இயலாமல் அவதியுறும் நாட்டு மக்களின் நலன் கருதி நல்ல புதிய தலைவர்களை நாட்டுக்கு நல்கிட உம்மை மன்றாடுகிறோம்.

3. பாதுகாக்கும் இறைவா, வளரும் இளம் மாணவச் செல்வங்கள் இக்கால சூழல்களால் தீயவழியில் செல்லாமல் ஞானத்துடன் கல்வியில் சிறந்து விளங்கவும், சுயத்திறமையை வளர்த்துக் கொள்ளும் நல்ல அறிவாற்றலைப் பெற்றிட உமதருளை வேண்டி மன்றாடுகிறோம்.

4. ஒளியின் சுடரே எம் இறைவா, கற்பு என்னும் கொடைக்கு எதிராக நடந்துக்கொண்ட நேரங்களுக்காக மன்னிப்பு வேண்டுகிறோம். இத்தவக்காலத்தில் உமது கட்டளைகளைக் கடைப்பிடித்து தூய வாழ்வு வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

## 11.04.2019 புனித ஸ்தனிஸ்லாஸ் திருப்பலி

**முன்னுரை**

டே. ஆக்னல் ஜோஸ்

அன்புக்குரியவர்களே, கத்தோலிக்கத் திருஅவை இன்று கிராக்கோ ஆயரான புனித ஸ்தனிஸ்லாஸ் நினைவு நாளைக் கொண்டாடுகிறது. போலந்து நாட்டில் உயர்குலப் பெற்றோரின் மகனாக 1030ஆம் ஆண்டு பிறந்த இவர், இறையன்பால் குருத்துவ வாழ்வைத் தேர்ந்துக் கொண்டார். இவரது சிறப்பான மறையுரைகள் கிறிஸ்தவர்கள் அறநெறி வழுவாமல் வாழ உதவி செய்தன. பல்வேறு சீர்த்திருத்த முயற்சிகளில் வெற்றி பெற்றதால், 1072ஆம் ஆண்டில் கிராக்கோ மறைமாவட்டத்தின் ஆயராக இவர் உயர்த்தப்பட்டார்.

புனித ஸ்தனிஸ்லாஸ் ஆயராகப் பொறுப்பேற்றதும், சமூகத்தில் நிகழும் அநீதிகள் அனைத்துக்கும் எதிராக குரல் கொடுத்தார். போலந்து அரசன் பொலஸ்லாஸ் மக்களுக்கு இழைத்து வந்த கொடூரங்களைக் கண்டித்தார். அரசன் ஒரு பெண்ணைக் கடத்திச் சென்ற வேளையில் அவ்வரசனைத் திருஅவையிலிருந்து விலக்கினார். இதனால் ஆத்திரம் அடைந்த அரசன், ஆயர் ஸ்தனிஸ்லாஸ் திருப்பலி நிறைவேற்றிக் கொண்டிருந்த வேளையில் அவரைக் கொலைச் செய்தான். புனித ஸ்தனிஸ்லாசைப் போன்று, நாமும் அநீதிகளுக்கு எதிராகக் குரல் கொடுக்கும் துணிவுபெற இத்திருப்பலியில் உருக்கமாக வேண்டுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. நீதியின் அரசரே இறைவா, உமது திருஅவையை வழிநடத்தும் எங்கள் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரும், சமூகத்தில் நிகழ்கின்ற அநீதிகளுக்கு முடிவுகட்டத் துணிவுடன் உழைக்க உதவுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

2. உண்மையின் அரசரே இறைவா, உலகெங்கும் வாழும் கிறிஸ்தவர்கள் அனைவரும் உமக்கு உண்மையுள்ளவர்களாய் வாழ்ந்து, தங்கள் சமூகத்தில் நீதியை நிலைநாட்டும் பொறுப்பை உணர்ந்து செயல்பட உதவுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

3. அன்பின் அரசரே இறைவா, இந்திய நாட்டை ஆட்சி செய்ய மக்கள் தேர்ந்தெடுக்க இருக்கும் தலைவர்கள் அனைவரும், நேர்மையான வழியில் நடந்து நாட்டை முன்னேற்றப் பாதையில் நடத்திச் செல்ல உதவுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

## 13.04.2019 புனித முதலாம் மார்ட்டின் நினைவு திருப்பலி

**முன்னுரை**

திரு. ஜான் அலெக்ஸ்

இறை இயேசுவில் அன்புக்குரியவர்களே, நாம் இன்று திருத்தந்தையும் மறைச்சாட்சியுமான புனித முதலாம் மார்ட்டின் அவர்களின் விழாவினை நினைவு கூறுகின்றோம். சமூகத்தில் மதிப்பு மிக்கவராக, கற்றறிந்த மகனாக, புண்ணிய வாழ்வில் தன்னை வளர்த்துக் கொண்டவராக விளங்கிய மார்ட்டின் அவர்கள் கான்ஸ்தாந்தினோபிளுக்குத் தூதுவராக திருத்தந்தையால் அனுப்பப்பட்டவர். தமக்குக் குறிக்கப்பட்ட பணியைத் திறம்படச் செய்வதில் வல்லவர். இதன் பலனாகவே 649ல் திருத்தந்தையாகத் தேர்வு செய்யப்பட்டார். இவரது பணிக்காலத்தில் திருஅவையில் ஒரு சிக்கல் நிலவியது, அதாவது கிறிஸ்துவிடம் இறை இயல்பும் மனித இயல்பும் இருந்தன என்பது கத்தோலிக்கத் திருஅவையின் நம்பிக்கையாகும். ஆனால் ஒரு சிலர் கிறிஸ்துவிடம் ஓரியல்பு மட்டுமே இருந்தது என்று போதித்து வந்தனர். அவர்களுக்கு எதிராக திருத்தந்தை மார்ட்டின் பொதுச் சங்கத்தைக் கூட்டி திருஅவைக்கு எதிராகச் செயல்படும் பேரரசர் கான்ஸ்தாந்தைப் புகழ்வது போலப் புகழ்ந்து கடுமையாக எச்சரித்தார்.

பேரரசரோ திருத்தந்தை உட்பட அனைவரும் தாம் சொல்வதைத் தான் செய்யவேண்டும் என்றும், திருத்தந்தையைக் கைது செய்யும் படியும் கட்டளைப் பிறப்பித்தான். ஆனால் அது முடியவில்லை. தன்னைமீறி ஒரு சக்தி திருத்தந்தையைக் காப்பாற்றுகிறது என்பதை அறிந்து விலகிக் கொண்டான். அதோடு நிற்காமல் சில நாட்கள் கழித்து மீண்டும் திருத்தந்தையைக் கைது செய்து நாடு கடத்தினான். சொல்லிலடங்கா துன்பங்களை அனுபவித்த புனித மார்ட்டின் 655ல் இறந்தார். தமது கல்லறையை வணங்கி மன்றாடிய அனைவருக்கும் புதுமைகள் செய்தார். திருஅவையால் புனித நிலைக்கு உயர்த்தப்பட்டார். அதிகாரத்திற்கும் செல்வாக்கிற்கும் அடிபணியாத நல்ல உள்ளங்களே நேர்மையை நிலைநாட்டும் வேட்கை உடையோராக வாழ முடியும் என்பதற்குச் சிறந்த முன்மாதிரி புனித முதலாம் மார்ட்டின் என்றால் அது மிகையாகாது.

இன்றைய நற்செய்தியும் இதற்குச் சான்றாக உள்ளதை நாம் பார்க்கலாம். தலைமைக் குரு கயபா "இனம் முழுவதும் அழிந்துபோவதைவிட ஒரு மனிதன் மட்டும் மக்களுக்காக இறப்பது நல்லது" என்று கூறியதை நற்செய்தியாளர் இறைவாக்காகவே எடுத்துக்கொண்டு, இயேசு உலக மக்கள் அனைவரும் வாழ்வு பெறவும் மீட்படையவும் தம்மையே கையளித்தார்

என்பதை எடுத்துரைக்கின்றார். இந்த மீட்பின் நிகழ்வுகளைக் கொண்டாட இருக்கும் நாமும் நம் வாழ்வில் பிறர் வாழ்வு பெற, சிறுசிறு இழப்புகளை ஏற்றுக்கொள்ள முன்வந்தாலே, அது பெரிதான செயலாக அமையும். புனித வாரம் நெருங்கி வரும் இந்நாட்களில் இதற்காக இத்திருப்பலியில் மன்றாடி பங்கெடுப்போம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. நம்பிக்கையின் திருஉருவே, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் துறவிகளுக்காக மன்றாடுகிறோம். உள்ளமும் செயலும் நன்மையைக் கனியாக ஈந்தால்தான் முழுமையாக மனிதம் மலரும் என்பதை அவர்களின் வாழ்வு மூலம் நாங்கள் அறிந்து மனித நேயமிக்கவர்களாக வாழும் வரமருள உம்மை மன்றாடுகிறோம்.
2. மனிதரால் புறக்கணிக்கப்பட்ட இயேசுவே, உம்மை அறியாத மக்களால் நாங்கள் புறக்கணிக்கப்படும்போது அவர்களை வெறுக்காமல் அவர்களுக்காக மன்றாடும் மனதைத் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
3. அனைத்திலும் சிறந்தது அன்பே என்பதை அறியும் நாங்கள் உண்மையான அன்பின் மக்களாக வாழவும், பெற்ற அன்பைப் பிறரோடு பகிர்ந்து வாழும் நல்லுள்ளம் பெறவும் வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## 14.04.2019 குருத்து ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திருமதி. டிலைலா சேவியர்

I. எசா. 50: 4-7 II. பிலி. 2: 6-11 லூக். 22: 14-23,56

இறை இயேசுவில் அன்புள்ளம் கொண்ட இறைமக்களே, இன்று குருத்து ஞாயிறு என்றும் ஆண்டவருடைய பாடுகளின் ஞாயிறு என்றும் அழைக்கப்படுகிறது. குருத்தோலைத் திருநாள் சோகமும், மகிழ்ச்சியும் கலந்து அமைந்த திருநாள். விடுதலை நாயகன் இயேசு வீதிகளில் ஆடம்பரமாக ஒலிவக் கிளைகளை ஏந்தி, ஓசான்னா என்று பாடி எருசலேமில் நுழைந்த நிகழ்ச்சியையும், நம்முடைய பாவங்களுக்காக பாவத்தை வெல்ல தம்மையே சிலுவையில் பலியாக்கப் போகின்றார் என்ற சோகமான நிகழ்ச்சியையும் கொண்டாடும் நாள் இந்நாள். மக்களுக்குத் தெய்வீக வாழ்வை அளிக்க வரவிருந்த உலக மீட்பரைப்பற்றி 500 ஆண்டுகளுக்கு முன்னதாகவே அவர் அனுபவிக்க வேண்டிய பாடுகளை இறைவாக்கினர் எசாயா வெளிப்படுத்துகிறார். அவரால் முன்னுரைக்கப்பட்ட இவையனைத்தும் இயேசுவின் வாழ்வில் நிறைவேறுகின்றன. குறிப்பாக இவ்வாசகம் கடவுளின் ஊழியர் எந்தளவுக்குப் பொறுமையோடும், நம்பிக்கையோடும் துன்பங்களைத் தாங்கிக் கொள்கிறார் என்பதை எடுத்துரைக்கின்றது.

இரண்டாம் வாசகத்தில் புனித பவுல் பிலிப்பிய மக்களிடையே காணப்பட்ட பொறாமை, தன்னலம், ஆணவம் ஆகியவற்றுக்கு மாறாக இயேசுவின் தாழ்ச்சியை எடுத்துரைக்கின்றார். இயேசு கடவுளாயிருந்தாலும், எவ்வாறு தன்னையே அடிமையின் நிலைக்குத் தாழ்த்தினாரோ கிறிஸ்துவர்களாகிய நாமும் தாழ்ச்சியுள்ளவர்களாக இருக்க வேண்டுமென்று வலியுறுத்துகிறார். இன்றைய நற்செய்தி இயேசுவின் பாடுகளில் தொடங்கி இயேசுவின் உயிர்ப்பை நம் கண்முன் வைக்கிறது. "அரசராக வரும் ஆண்டவர் வாழி" என்பதில் தொடங்கி, "அவனைச் சிலுவையில் அறையும்" என்றும் "எல்லாம் நிறைவேறியது" என்றும் நிறைவு பெறும் நற்செய்தி வாசகம் இயேசுவின் எருசலேம் பயணம் இதமான அனுபவமல்ல, மாறாக கரடுமுரடான துன்பமும், வேதனையும் நிறைந்த பாதையென்றும், இயேசுவைப் பின்பற்றி நாமும் இத்தகைய பாதையில் பக்தியோடு பயணம் செய்ய வேண்டுமென்றும் அழைக்கப்படுகிறோம்.

நமது மீட்பின் பெருநிகழ்வுகள் நிறைவேறிய புனித வாரத்தைத் தொடங்கும் நாம் இயேசுவின் பாடுகளில் பங்கேற்று அவருடன் புது வாழ்வுக்கு உயிர்த்தெழ நம்மை ஆயத்தப்படுத்துவோம். நல்ல கள்ளன் இயேசுவோடு தன் துன்பங்களை ஒப்புக்கொடுத்து நித்திய வாழ்வைப் பெற்றுக்கொண்டது போல நாமும் இயேசுவின் பாடுகளோடு நமது வாழ்க்கைச் சிலுவையைச் சுமந்து இயேசுவில் மரித்து அவரோடு உயிர்ப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. எல்லாம் வல்ல அன்பு இறைவா, இத்திரு அவையை வழிநடத்தும், திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரும் இத்தவக்காலத்தில் திருஅவையின் மக்களைப் புனித வாழ்விற்கு அழைத்துச் செல்லும் நற்தூதுவர்களாக சிறந்து விளங்க உமது தூய ஆவியாரின் வல்லமையை நிறைவாக அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. தாழ்ச்சியே உருவான இறைவா, எங்களைக் காரணமில்லாமல் பகைக்கிறவர்கள், வெறுப்பவர்கள் முன்னிலையில் பொறுமையோடும் தாழ்ச்சியோடும் இருக்கும் மனநிலை எங்களில் வளர அருள்புரியுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

3. நன்மையே உருவான இறைவா, இப்புனித வாரத்தைத் தொடரும் நாங்கள் உண்மையாகவே எங்களுடைய தவறுகளுக்கு மனம் வருந்தவும், ஒப்புரவு அருளடையாளத்தின் வழியாக, எங்களைத் தூய்மையாக்கி இறையாட்சிக்கு மாட்சிமை தரும் தூய வழியில் எங்களை நடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. அன்பே உருவான இறைவா, எங்களுடைய சொற்களினால் பிறரைச் சிலுவையில் அறையாமல், மகிழ்ச்சியும், ஊக்கமும், உற்சாகமும் தரும் சொற்களால் பிறரை வாழவைக்கும் நல்ல உள்ளம் தந்திட உம்மை மன்றாடுகிறோம்.

## 18.04.2019 ஆண்டவரின் இராவுணவு (பெரிய வியாழன்) திருப்பலி

**முன்னுரை**

திரு. பிரான்சிஸ் அலாய்சியஸ்

I. வி.ப. 12: 1-8, 11-14 II. 1கொரி. 11: 23-26 யோவா. 13: 1-15

இறையேசுவில் அன்புமிக்க சகோதரிகளே, சகோதரர்களே, இன்று இறையேசு தன் பணிவாழ்வின் இறுதிக் கட்டத்தில் சீடர்களுடன் பந்தியமர்ந்து "பாஸ்கா" விழாவைக் கொண்டாடி மகிழ்ந்ததை நினைவு கூற திருஅவையானது நம்மை ஆண்டவரின் இறுதி இராவுணவுத் திருப்பலிக்கு அழைக்கிறது. இயேசு சீடர்களின் மதிப்புக்குரியவராக இருந்தும் அடிமையின் பணியாகிய காலடி கழுவும் செயலைச் செய்தார். ஒருவர் ஒருவருக்குப் பணி செய்ய வேண்டும் என்றும் பணி செய்வதே சீடர்களின் அடையாளம் என்றும் கூறுகிறார். அடுத்து, இயேசு தம் சீடர்களுக்கு வாழ்வு தரும் உணவாக மாறுகிறார். கிறிஸ்துவே தலைமைக் குருவாகவும், பலிப்பொருளாகவும் நின்று குருத்துவத்தை ஏற்படுத்தி புதிய பாஸ்கா கொண்டாட்டத்திற்கு நம்மை அழைத்துச் செல்கிறார். "நான் என்றும் உங்களோடு இருக்கிறேன்" என்று சொல்லி நற்கருணை என்னும் புதிய உடன்படிக்கையை வெளிப்படுத்துகிறார். நற்கருணைக் கொண்டாட்டத்தை நிகழ்த்தும் பொறுப்பையும், மக்களுக்கு கடவுளின் செய்தியை அறிவித்து அவர்களுக்குப் பணி செய்யும் பொறுப்பையும் குருக்களிடம் ஒப்படைத்து குருத்துவத்தை ஏற்படுத்தினார். ஆகவே, இன்று நாம் கிறிஸ்துவின் வழியில் அன்பு, மன்னிப்பு, தாழ்ச்சி ஆகியவற்றை ஆடையாகக் கொண்டு நம்மை அலங்கரித்து திருப்பலியில் பங்குகொள்வோம். "பிறருக்குப் பணி செய்வதே" நமது வாழ்வின் நோக்கமாக இருக்க இறைவனிடம் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. பணிவிடைப் புரியவே வந்தேன் என்று சொன்ன இறைவா, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள், துறவறத்தார் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் உடல் உள்ள ஆன்ம நலனோடு வாழவும் ஒருவருக்கொருவர் பிறர்நலப் பணிபுரிந்து வாழவும் அருள்புரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. வழிநடத்திடும் மாபரனே, எங்கள் நாட்டை வழிநடத்தும் தலைவர்கள் சுயநலத்தில் மூழ்கிடாது நாட்டு மக்களின் வாழ்வாதார பிரச்சனைகளுக்கு முக்கியத்துவம் தந்து அமைதியாக மக்களை வழி நடத்திட வரம் தர உம்மை மன்றாடுகிறோம்.

3. அன்பின் இறைவா, நீர் சீடர்களின் பாதங்களைக் கழுவி அன்பின் முக்கியத்துவத்தை எங்களுக்கு வெளிப்படுத்தினீர். எங்கள் சொல், செயல், சிந்தனை அனைத்தையும் பிறருக்கு அர்ப்பணித்திட வேண்டிய வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

4. ஒப்பற்ற குருவே எம் இறைவா, உம் பணி செய்திடும் எம் குருக்கள் யாவரும் தங்களது வாழ்வில் எதிர் கொள்ளும் உடல் ரீதியான, மனரீதியான போராட்டங்களில் வெற்றி காணத் தேவையான மனநிலையைத் தந்தருள உம்மை மன்றாடுகிறோம்.

## 19.04.2019 பெரிய வெள்ளி (திருச்சிலுவை ஆராதனை) வழிபாடு

**முன்னுரை** திருமதி. டிலைலா சேவியர்

"திருச்சிலுவை மரமிதோ, இதிலேதான் தொங்கியது உலகத்தின் இரட்சணியம்"
வருவீர் ஆராதிப்போம்.

இறை இயேசுவில் இனியோரே, "எல்லாம் முடிந்தது" என்றும், "தந்தையே! உமது கைகளில் என் ஆவியை ஒப்படைக்கிறேன்" என்றும் கல்வாரியின் சிலுவையில் நமக்காக உயிர்தந்த இயேசுவின் மரணத்தை நினைவில் நிறுத்தி திருச்சிலுவை ஆராதனைக்கு நம்மைத் தயாரிப்போம். மனித சாயலே இல்லாத அளவுக்கு அவரை (இயேசுவை) துன்புறுத்தி, எள்ளி நகையாடி, காரி உமிழ்ந்து, முள்முடி சூட்டி, சாட்டையால் அடித்து, உடலிலுள்ள இரத்த நாளங்கள் கிழிந்து இரத்தம் சிந்த, பாரமான சிலுவையைச் சுமந்து இறுதியில் கல்வாரியில் உயிர் தந்த இயேசுவை மனக்கண்முன் கொண்டு வருவோம். பாவமன்னிப்புக்காக, பாவிகளுக்காக, பாவிகளை அன்பு செய்வதற்காக இரத்தம் சிந்தி உயிரைக் கையளித்த இயேசுவின் திருச்சிலுவை அடியில் அமர்வோம்.

கத்தோலிக்க திருஅவையிலுள்ள அனைத்து மக்களும் பக்தியுடனும், விசுவாசத்துடனும் திருச்சிலுவையை ஆராதிக்க ஆலயங்களில் சடங்கு முறைகள் தகுந்த முறையோடு அமைக்கப்பட்டுள்ளன. இந்த வாய்ப்பினை இன்று பங்கு ஆலயங்களிலுள்ள அருட்தந்தையர்களோடு இணைந்து திருச்சிலுவைக்கு ஆராதனைச் செய்வோம். இறைவாக்கு வழிபாட்டில் வாசிக்கப்படும் இயேசுவின் பாடுகளின் தொகுப்பினைப் பக்தியோடும் உள்ளன்போடும் கவனித்து நம்முடைய அன்பை இயேசுவுக்கு வெளிப்படுத்துவோம். மூடப்பட்ட திருச்சிலுவையை அருட்தந்தையர்கள் பீடத்திற்குக் கொண்டு வந்து முகம் குப்புற விழுந்து அவர்கள் திருச்சிலுவைக்கு ஆராதனை செலுத்தும்போது, இயேசு கெத்சமணி தோட்டத்தில் இரத்த வியர்வை வியர்த்து முகம் குப்புற விழுந்து செபித்ததைக் கண்முன்னே நிறுத்தி மனம் வருந்தி செபிப்போம். அன்று ஆலயத்தில் உள்ள அமைதி, நிசப்தம், துக்கம், வெறுமையான பீடம் இவைகளையெல்லாம் நாம் இயேசுவின்மீதும், அவர் மரித்த சிலுவையின் மீதும் கொண்டுள்ள பக்தியையும், நம்பிக்கையையும் உணர்த்துகின்றன.

நமக்காக வைக்கப்பட்டுள்ள திருச்சிலுவையைத் தகுந்த பக்தியோடும், ஆராதனையோடும் முத்தமிடுவோம். இயேசுவின் திருச்சிலுவையை முத்தமிட்டு ஆராதனைச் செய்யும்போது, நம்மால் இயன்ற அளவு புண்ணிய பூமியின் வளர்ச்சிக்கு உதவும் வகையில் காணிக்கைத் தந்து உதவி செய்வோம்.

ஏழைகளுக்குச் செய்ததெல்லாம் எனக்கே செய்தீர்கள் என்ற இயேசுவின் வார்த்தைகளை நினைவில் கொள்வோம். இரக்கத்தின் காலமான இந்நாட்களில் ஏழைகளுக்கு நம்முடைய தியாகச் செயல்களின் மூலம் இரக்கம் காட்டுவோம். பெரிய வெள்ளி சிலுவை ஆராதனை அன்று ஆலயத்தில் பாடும் பாடல்களைப் பக்தியோடு பாடியோ அல்லது உள்ளத்தில் தியானித்தோ பாடல்கள் வழியாக ஆராதனைச் செலுத்துவோம். சிலுவையை மதத்தின் சின்னமாக மட்டும் பார்க்காமல் இலட்சியத்தின் சின்னமாக, விடுதலையின் சின்னமாக, மீட்பின் சின்னமாக, அன்பின் சின்னமாக, அவரணைப்பின் சின்னமாக, ஆறுதலின் சின்னமாக இருப்பதை சிந்திப்போம். இன்று எத்தனையோ வீடுகளில் நாம் பாடுபட்ட சுரூபத்தை வைக்க அஞ்சுகிறோம். துன்பங்கள் தொடர்ந்து வரும் என்று சிலுவையை வைக்க மறுக்கிறோம். சிலுவை ஆகாத சின்னம் என்று சொல்வதைக் கேட்டுள்ளோம். ஆனால் உண்மையென்னவென்றால் துன்பமில்லாமல் இன்பமில்லை 'No cross No crown' நமது சுயநலமும், பேராசையும், வீண்பழியும், முன்தீர்மானங்களும் பிறரின்மீது தினம், தினம் தாங்கமுடியாத சிலுவையைச் சுமத்தாமல் பார்த்துக்கொள்வோம். பெரிய வெள்ளியான இன்று வெறும் சடங்குகளைப் பின்பற்றுவது மட்டுமல்லாமல் நம்மில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்த திருச்சிலுவையின் நிழலில் நம்மை ஒப்புக்கொடுத்து செபிப்போம்.

திவ்விய இயேசுவே, தேவரீர் சிலுவையில் அறையப்பட்டதைத் தியானித்து உம்மை ஆராதிக்கிறோம்.

## 20.04.2019 பெரிய சனிக்கிழமை இரவு பாஸ்கா திருவிழிப்பு திருப்பலி

**முன்னுரை**

திரு. மரிய செபாஸ்டின்

ஆண்டவரில் அன்பும் நம்பிக்கையும் கொண்ட சகோதர சகோதரிகளே, இன்றைய திருவழிபாடு 5பெரும் பிரிவுகளைக் கொண்டுள்ளது.1. திருஒளி வழிபாடு, 2. பாஸ்கா பவனியும் புகழுரையும் 3. இறைவாக்கு வழிபாடு 4. திருமுழுக்கு வழிபாடு 5. நற்கருணை வழிபாடு. இவ்வழிபாடுகளில் கலந்துக்கொண்டு அகமகிழ்வோம், அக்களிப்போம்.

**திருஒளி வழிபாடு:** இஸ்ரயேல் மக்கள் செங்கடலைக் கடந்து வந்தபோது இறைவன் எகிப்தியருக்கு மேகத் தூணாகவும், இஸ்ரயேலர்களுக்கு ஒளிப்பிழம்பாகவும் நின்று வழிநடத்திச் சென்றதை ஒளிவழிபாடு சுட்டிக் காட்டுகிறது. நம்மிடம் உள்ள அக இருளை அகற்றி, புதுவாழ்வுக்கு

அழைத்துச் செல்வதன் பொருளை உணர்த்துகிறது. கிறிஸ்துவைக் குறிக்கும் பாஸ்கா திரியானது இயேசுவே தொடக்கமும், முடிவும் என்பதையும் காலங்களும், யுகங்களும் அவருக்குட்பட்டதையும், ஆட்சியும், மாட்சியும் பெறத்தக்கவர் அவரே என்பதையும் உணர்த்தும் செபவழிபாட்டிற்கு நம்மை ஆயத்தமாக்குவோம்.

**பாஸ்கா பவனியும், புகழுரையும்:** பாஸ்கா நிகழ்வு பழைய ஏற்பாட்டின் விசுவாசப் பிரமாணம். இஸ்ரயேல் மக்கள் எகிப்தில் அடிமை வாழ்விலிருந்து உரிமை வாழ்விற்கும் பாவத்திலிருந்து விடுதலை வாழ்விற்கும், இருளில் இருந்து ஒளிக்கும், இம்மையில் இருந்து மறுமைக்கும் கடந்து வந்ததையே இந்த பாஸ்கா பவனியும், அதனை அடுத்த தலைமுறைக்கு உணர்த்தும் விசுவாச அறிக்கையாக பாஸ்கா புகழுரையும் அமைந்துள்ளன.

**இறைவாக்கு வழிபாடு:** இன்றைய இறைவாக்கு வழிபாடு, உலக படைப்பு, மனித படைப்பு, மனிதரின் பாவ அடிமைத்தனம், விடுதலைப் பெற்ற செங்கடல் நிகழ்ச்சி, ஆபிரகாம் வழி உறவுப்பலி, எசாயா தரும் இறைவனின் வாக்குறுதிகள், எசேக்கியேல் வழி, புதியன செய்வேன் புதிய ஆவி, புதுப்படைப்பு வாக்குறுதி இவற்றைச் சுட்டிக்காட்டும் பழைய ஏற்பாட்டு வாசகங்கள் முடிந்து, 40 நாட்களாக பாடாது இருந்த "அல்லேலூயா" என்ற வெற்றி கீதம் பாடுவோம். அதனைத் தொடர்ந்து புதிய ஏற்பாடு உரோமையர் திருமுகத்தில் உயிர்த்த கிறிஸ்துவோடு இணைந்துள்ள நமது புது வாழ்க்கை, அவரது பாடுகள், மரணம், உயிர்ப்பில் மறைந்துள்ளதை புனித பவுல் விளக்குகிறார். நற்செய்தியில் கிறிஸ்துவின் உயிர்ப்புச் செய்தி சாட்சியப்படுத்தப்படுகிறது.

**திருமுழுக்கு வழிபாடு:** திருமுழுக்கு புது வாழ்வுக்கு கடந்துவரும் மானுட வாழ்வின் தொடக்க நிகழ்வாகும். மனிதன் இறைவனால், இறைத் தன்மையோடு பிறக்கும் புனித நிகழ்வுதான் திருமுழுக்கு. இன்று நம் திருமுழுக்கு வாக்குறுதிகளைப் புதுப்பித்து, புனிதர் அனைவரின் பரிந்துரையோடு விண்ணக வாழ்வில் நுழைய புதுப்பிறப்பின் அடையாளமாக நம்மீது புனித நீர் தெளிக்கப்படும். தூய விசுவாசத்துடன் திருஅவையின் புனித சடங்கில் பங்கு பெறுவோம்.

**நற்கருணை வழிபாடு:** நற்கருணை உயிர்த்த இயேசுவின் பிரசன்னம். இந்த விசுவாச சத்தியம் நிறைவேறிய நாள் இன்றுதான். ஆகவே இயேசுவின் உயிர்ப்பு ஏதோ ஒரு வரலாற்று நிகழ்வு மட்டுமன்று, நம்மில் நமக்குள் நடக்கும் விசுவாச மாற்றம். இதை உணர்வதும், கொண்டாடுவதும், கொண்டாட்டத்தை அறிவிப்பதும்தான் திருப்பலி. இதை இந்த உயிர்ப்பு திருநாளில் உணர்ந்து கொள்வோம். இன்றைய புனித சடங்குகளில் பக்தி விசுவாசத்துடன் பங்கேற்று இயேசுவை ஆதாயமாக்குவோம். கிறிஸ்துவின் மகிழ்வைப் பிறருடன் பகிர்ந்துக்கொள்வோம்.

## 21.04.2019 உயிர்ப்பு பெருவிழா திருப்பலி

**முன்னுரை**

திரு. ஜான் அலெக்ஸ்

I. தி.ப. 10: 34, 37-43 II. கொலோ. 3: 1-4 (அ) கொரி 5: 6-8 யோவா. 20: 1-9

இறை இயேசுவில் அன்புக்குரியவர்களே, திருப்பலி நிறைவேற்றும் தந்தையர்(கள்) சார்பாகவும் பங்கின் சார்பாகவும் உங்கள் அனைவருக்கும் உயிர்ப்பு பெருவிழா நல்வாழ்த்துக்களும் செபங்களும். "சாவு வீழ்ந்தது, வெற்றி கிடைத்தது, இயேசு உயிர்த்தார், அல்லேலூயா" என்னும் வெற்றிப் பாடல் நம் உள்ளங்களில் இன்று ஒலிக்கின்றது. பாலஸ்தீன நாட்டின் பாரம்பரியப்படி, ஒருவர் இறந்த 3 நாட்களுக்குபின் கல்லறைக்கு உறவினர் சென்று வருவது வழக்கும். இங்கே ஓய்வுநாள் அதாவது சனிக்கிழமை, முடிந்தவுடன் விடியற்காலையிலேயே மகதலா மரியா கல்லறைக்குச் சென்று, இயேசுவின் உடலைக் காணவில்லை என்பதை அறிந்தவுடன் ஓடிவந்து பேதுரு மற்றும் யோவானிடம் சொல்கிறாள். இன்றைய நற்செய்தியில், யோவான் அங்குத் துணிகளையும், இயேசுவின் தலையை மூடியிருந்த துண்டையும் கண்டதாகவும் அத்துண்டு மற்றத் துணிகளோடு இல்லாமல் ஓரிடத்தில் வைக்கப்பட்டிருந்ததாகவும் பார்க்கின்றோம்.

பாலஸ்தீனப் பகுதியில், தலைவர் வீட்டிலே சாப்பிடும்போது கை துடைப்பதற்காகத் துணி மேசைமீது வைக்கப்பட்டிருக்கும். அவர் சாப்பிட்டதும், கையைத் துடைத்துவிட்டு அதே இடத்தில் மீண்டும் மடித்து வைத்துவிட்டு செல்வார். ஒரு வேளை பாதியிலேயே செல்ல வேண்டியிருந்தால், அவர் அத்துணியை அப்படியே மடிக்காமல் சுருட்டிப் போட்டுவிட்டு செல்வார். இதன் பொருள் அவர் மீண்டும் வருவார் என்பதே. இன்று நற்செய்தியில், துணி சுருட்டி வைக்கப்பட்டிருந்தது என்றால் இயேசு மீண்டும் வருவார் என்பதை நமக்கு உணர்த்துகிறது. ஆகவே இயேசு மீண்டும் வருவார் என்கிற செய்தி நமக்கு உறுதியாகத் தரப்படுகிறது. இதுவே நம் நம்பிக்கையின் மறைபொருள். தளர்ந்து போன, துன்பங்களால் வெறுத்துப்போன நமக்கு இது மிகப்பெரிய ஆறுதல் செய்தி. துன்பங்களை மறந்து இயேசு வருவார் என்கிற புத்துணர்ச்சியோடு வாழ்வை எதிர்கொள்ள வேண்டி இத்தியாகப் பலியில் பங்கெடுப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. நம்பிக்கையின் திருஉருவே இறைவா, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவிகள் அனைவரும் நம்பிக்கையற்றோருக்கு நம்பிக்கையாகவும், சோர்வுற்றோருக்குப் பலமாகவும், வழிதவறியோருக்கு நல்வழிகாட்டியாகவும் திகழ்ந்து உமக்காக வாழும் வரத்தைத் தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. உயிர்ப்பின் நாயகனே இறைவா, உம் வாக்கை அன்புடனும் தாழ்ச்சியுடனும் கேட்டு கீழ்ப்படியும் மக்களாக நாங்கள் வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

3. சாவை வென்று உயிர்த்த மாட்சிமிகு இறைவா, தொடக்க காலத் திருஅவையில் இருந்த பகிர்ந்து வாழும் தாராள உள்ளத்தை எங்களுக்குத் தந்து உமது தூய ஆவியினால் எங்களை நிரப்பியருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. வழியும் உயிருமான எம் இறைவா, இன்றைய நவீன உலகின் சாதனங்களான இன்டர்நெட், அலைபேசி, சமூக ஊடகங்களின் தாக்கத்தினால் இளைஞர்கள் வழிமாறிச் சென்றுவிடாமல் உமது உயிர்ப்பின் வழியில் நடக்க அவர்களுக்கு தேவையான அனைத்து அருள்வரங்களையும் நிறைவாக அளித்தருள உம்மை மன்றாடுகிறோம்.

## 25.04.2019 புனித மாற்கு நற்செய்தியாளர் திருப்பலி

**முன்னுரை** திரு. ஜீசஸ் மகுட மன்னன்

நற்செய்தி நாயகனாம் கிறிஸ்துவின் அன்பில் வாழ்ந்துக் கொண்டிருக்கும் சகோதர சகோதரிகளே, இன்று திருஅவை நற்செய்தியாளர் புனித மாற்கு விழாவைக் கொண்டாட அழைக்கின்றது. தொடக்கக்கால கிறிஸ்துவர்களின் செபவழிபாடு இவர் இல்லத்தில் தான் நடைபெற்றது. இவருடைய உறவினர் பர்னபாவும் இவர்களோடு இருந்தார். சிறு வயதிலிருந்தே செபவழிபாட்டுச் சூழ்நிலையில் வளர்ந்ததால் கிறிஸ்துவின் வரலாற்றில் தெளிவுப்பெற்றிருந்தார். பர்னபாவோடும், பவுலோடும் இணைந்து நற்செய்திப் பணியில் ஈடுபட்டு வந்தார். எகிப்தின் அலெக்சாந்திரியா நகர் திருஅவையை நிறுவி ஆயராகப் பணியேற்றதாக மரபு கூறுகிறது. சைப்ரசில் பவுல், பர்னபாவோடு கூட்டு நற்செய்திப் பணியில் ஈடுபட்ட இவர், பெரும்பாலும் பேதுருவோடு நெருங்கிய நண்பராகவும், கிறிஸ்துவின் நற்செய்திகளை மொழி பெயர்த்தும் தேர்ச்சிப் பெற்றார்.

பேதுருவின் போதனைகளை முழுமையாக உள்வாங்கியதால், இயேசு கிறிஸ்துவின் உண்மையான திடமான பற்றாளராக மாறினார். கடலின் சீற்றத்தால் கலங்கிய வெனிஸ் நகர மாலுமிகளுக்கு ஆயர் உருவில் வந்து காப்பாற்றியதால், "வெனிஸ் நகரத்தின் பாதுகாவலர்" மற்றும், "வழக்கறிஞர்களின் பாதுகாவலர்" என்றும் திருஅவையால் அழைக்கப்படுகிறார். நற்செய்தியைப் பகுத்தாய்ந்துப் போதித்ததால் இவர் இவ்வாறு அழைக்கப்படுகிறார். இவருடைய சின்னம், "நான்கு சிறகுகளை உடைய சிங்கம்" ஆகும். இவருடைய காலத்தில் கிறிஸ்துவத்தை ஏற்றுக் கொண்ட புறவினத்து மக்களுக்காக "கிரேக்க மொழி"யில் நற்செய்தியை எழுதினார். கி.பி. 68ம் ஆண்டு ஏப்ரல் 23ம் நாள் இவரைத் தெருவில் இழுத்துச்சென்று சாகடித்தனர். கிறிஸ்துவின் சாட்சியாக மரித்தார், கிறிஸ்துவின் நற்செய்திக்குச் சான்று பகர்ந்து சாட்சிய வாழ்வு வாழ்ந்த புனித மாற்குவைப்போல நாமும் வாழுவோம் என உறுதியளித்து பக்தியோடு திருப்பலியில் பங்கெடுப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. நல்லாயனே இறைவா, கடவுளின் மகனாகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றிய நற்செய்தியின் வழியில் வாழும் திருத்தந்தை பிரான்சிஸ், ஆயர்கள், குருக்கள், கன்னியர், இருபால் துறவியர், பொதுநிலையினர் அனைவரும் நற்செய்தியாளர் மாற்குவைப்போல, உயிருள்ள இறைவார்த்தைக்கு உயிரளித்து சாட்சிய வாழ்வு வாழத் தேவையான வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

2. கைவிடப்பட்டோரின் காவலனே இறைவா, இன்றைய இக்கட்டான சூழ்நிலையில் நாட்டுத்தலைவர்கள், சமூக ஆர்வலர்கள், மக்களின் வாழ்வாதாரத்தைப் பெருக்கும் நல்நோக்குடன் வாழவும், பொதுநல வாழ்வில் ஆர்வமுடன் செயல்படத் தேவையான வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

3. குணமளிக்கும் ஆண்டவரே எம் இறைவா, இயேசுவின் உயிர்ப்பில் உயிர் பெற்றுள்ள நாம், நற்செய்திக்காக வாழ்ந்து சாட்சியம் பகர்ந்த மாற்குவைப்போல, பிற இனத்தார், ஏழைகள், அனாதைகள், கைவிடப்பட்டோர், நோயாளிகளுக்கு நற்செய்தியே வானக மருந்தாகும் என உணரச் செய்ய வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

4. உலகின் ஒளியான இறைவா, சமுதாய சீர்கேட்டால் சிக்கித் தவிக்கும் இளைஞர்கள், இளம்பெண்கள், நாகரீக மோகத்தாலும், கடவுளுடைய கட்டளைகளை மீறுவதாலும் வழித்தவறிச் செல்கின்றனர். இவர்கள் பங்குத் தந்தையின் வழிகாட்டுதல், பக்த சபையில் பங்கெடுத்தல், தியானத்தில் பங்கெடுத்து ஒப்புரவு அருளடையாளத்தைப் பெற்று கிறிஸ்துவ சாட்சிய வாழ்வு வாழ தேவையான வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

## 28.04.2019 உயிர்ப்புக் காலம் இரண்டாம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திரு. D.V.R. ராஜா

I. தி.ப. 5: 12-16 II. திவெ. 1: 9-11, 12-13, 17-19 யோவா. 20: 19-31

இன்று உயிர்ப்புக் காலம் 2ஆம் ஞாயிறாகவும் இறை இரக்க ஞாயிறாகவும் திருஅவை நினைவு கூறுகிறது. சதிகாரர்களின் சூழ்ச்சியால் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து எண்ணற்ற பாடுகளை ஏற்று அவமான சின்னமான சிலுவையில் மரித்து அதை புனித சின்னமும் கிறிஸ்தவர்களின் அடையாளமுமாக மாற்றினார். தான் உயிரோடு இருந்தபோது எண்ணற்ற நோயாளர்களையும், துன்பப்பட்டோரையும், இறந்தோரையும் தம் வல்லமையால் குணப்படுத்தி மீட்டு உயிர்த்தெழச் செய்ததுபோலவே, இயேசு இறந்து உயிர்த்தப்பின் தம் சீடர்களுக்கும் அவ்வல்லமையை அளித்தது இறை இரக்கச் செயலே.

இவற்றிற்குச் சான்றாக முதல் வாசகத்தில் பேதுரு செய்த

அருளடையாளங்களைக் காண்கிறோம். அவரோடு இருந்த சீடர்களை திக்கற்றவர்களாய் விடாது, பலமுறை உயிர்த்த இயேசு காட்சி கொடுத்து அவர்களைத் திடப்படுத்தி தூய ஆவியாரைத் துணையாகத் தந்துச் சென்றார். இதுவும் அவரது இறை இரக்கச் செயலேயாகும். இவற்றை நாம் மற்ற இரு வாசகங்களிலும் காண்கிறோம். தோமா முதலில் நம்பிக்கைக் கொள்ளாவிடினும் பின்னாளில் மிகப்பெரும் சாட்சியாய் விளங்கி புனிதத்துவம் அடைந்தார். நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சினம் கொள்ளத் தாமதிப்பவர். அவரிடம் அன்பும் இரக்கமும் மேலோங்கி உள்ளது. எனவே உயிர்த்த கிறிஸ்து அனைத்தின்மீதும் வல்லமைப் பெற்று சகல அதிகாரத்துடன் விளங்குகிறார். நாமும் இறைவார்த்தையில் நம்பிக்கைக் கொண்டு அவர் நமக்குத் தந்த போதனைகளையும் வாழ்வின் மாதிரிகளையும் பின்பற்றி இறை இரக்கக் காலத்தில் அவரது இரக்கம் நமக்கும் நம் குடும்பத்திற்கும் நம்மைச் சார்ந்தவருக்கும் எளியோருக்கும் கிடைக்கப்பெற இத்திருப்பலியில் நம்பிக்கையுடன் வேண்டுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. **திருஅவைக்காக:** உயிர்த்த இயேசுவே, உமது உன்னதப் பணியை ஏற்று திருஅவையை திறம்பட ஆளுமைச் செய்யும் எமது திருத்தந்தையின் உடல்நலனைப் பாதுகாத்து நல்லாலோசனை நல்கி வழிநடத்திடவும் ஏனைய குருக்கள், கன்னியர், பொதுநிலையினர் மற்றும் துறவறத்தாரையும் அவர்தம் பணிகளையும் ஆசீர்வதித்திடவும் வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. **பங்கு மக்களுக்காக:** உயிர்த்த ஆண்டவரே, எம் பங்கு மக்கள் அனைவரும் உமது வார்த்தையில் தளராத நம்பிக்கைக் கொண்டு, சாட்சி பகரவும், தங்களின் பிள்ளைகளை ஒழுக்கத்திலும், விசுவாசத்திலும் வளர்க்கவும் எல்லா நன்மைகளையும் ஆசீரையும் பங்கு மக்களும், பிள்ளைகளும் பெற்றிடவும் வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

3. **இளையோருக்காக:** உயிர்த்த எம் அன்பு தெய்வமே, இக்காலச் சூழலில் இளையோர் நல்லவற்றையே பற்றிக்கொண்டு தீயன தவிர்த்து வாழ்வில் முன்னேறவும், தேர்வு எழுதியுள்ள மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெற்று தங்களின் இலக்கை அடையவும், நல்ல வருவாய் கிடைக்கின்ற வேலை, தொழில் அமையப் பெற்று, ஏற்றம் காணவும் அருள்புரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. **நாட்டு மக்களுக்காக:** உயிர்த்த இயேசுவே, பல ஆண்டுகளாக நிலவுகின்ற அரசியல் சூழலில் மக்கள் சிக்கித் தவிக்காமல், நல்லதோர் தலைவர்களை நாட்டுக்குத் தந்து, அவர்கள் சுயநலமில்லா சேவையினைச் செய்திடவும், நற்சிந்தனையோடும், பரந்த மனதோடும் மக்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் செய்யக் கூடிய மனதையும், ஞானத்தையும் அளித்தருள உம்மை மன்றாடுகிறோம்.

## 28.04.2019 இறை இரக்கத்தின் பக்தி செபவழிபாடு

**முன்னுரை**

சகோ. பிபின்

தாய் தன் பிள்ளையைப் பாதுகாப்பதுபோல் இந்த இரக்கத்தின் பக்தியைப் பரப்புவோர்களைப் பாதுகாப்பேன், அவர்களுடைய மரண வேளையில் நீதிபதியாக இல்லாமல் இரட்சகராக இருப்பேன். உலக ஆரம்பத்திலிருந்தே இறைவன் மக்கள்மீது தாம் கொண்டுள்ள இரக்கத்தை வெளிப்படுத்தி வந்துள்ளார். பழைய ஏற்பாட்டில் இயேசு கிறிஸ்துவின் வழியாகவும், இறைவனின் இரக்கம் நமக்கு வெளிப்படுகின்றது. ஆண்டவரை அன்பு செய்கிறவர்களக்கு தனது மகிழ்ச்சிப் பாடல் மூலமாக கூறுகின்றார். அன்பு அனைவருக்கும் பொதுவான ஒன்று. இரக்கம் அதில் கிடைக்கும் அழகான பண்பு. இறை இரக்கம் அனைவருக்கும் சமமான அன்பு. ஆகவே இந்த இறை இரக்க வழிபாட்டில் நமக்காகவும், மனுக்குலம் முழுவதும் சிறப்பாக பாவிக் இறைவனின் இரக்கத்தையும், அன்பையும் பெற்று இறையனுபவம் பெற இத்திருவழிபாட்டில் சிறப்பாக செபிப்போம்.

**மன்னிப்பு வழிபாடு**

ஓ, வாழ்வின் சுவையே, இரக்கத்தின் ஊற்றே, நீா் அகில உலகையும் அரவணைத்து உமது இரக்கம் முழுவதையும் எம்மீது பொழிந்துள்ளீா். ஆனால் நாங்கள் அந்த இரக்கத்தை ஏற்றுக்கொள்ளாமல், பிறருக்கு இரக்கம் காட்டாமல் உமக்கு எதிராக செய்த பாவங்களுக்காகவும் செய்ய தவறிய நன்மைகளுக்காகவும் மன்னிப்பு கேட்கிறோம்.

நம் தனிப்பட்ட மன்னிப்பு விண்ணப்பங்களை எழுப்பலாம்

சிறிது நேரம் மௌனத்திற்கு பிறகு

**பாடல்: பாசத்தோடு தேடிவந்த இயேசுவே**

இறை இரக்கத்திற்காக செபிப்போம்: திருப்பாடல் 123
இறை இரக்கத்தின் மன்றாட்டு மாலையை செபிக்கவும்
பொதுவான கருத்துக்களுக்காகவும், தனிப்பட்ட கருத்துக்களுக்காகவும் மன்றாடுவோம்.

**இறுதி செபம்**

தயை நிறைந்த இறைவா, இரக்கத்தின் தந்தையே, ஆறுதலின் தேவனே, உம்மில் விசுவாசமும் நம்பிக்கையும் கொண்ட ஆன்மாக்கள்மீது இரக்கம் கொண்டவரே, உமது அளவற்ற இரக்கத்தைக் குறித்து, எங்கள்பேரில் உமது கருணைக் கண்களைத் திருப்பியருளும். இத்துன்ப உலகில் எங்களுக்கு நேரிடும் சோதனைகளிலும் உமக்குப் பிரமாணிக்கமாய் இருக்க உமது இரக்கத்தின் அருள்கொடைகளை எங்கள்மீது நிறைவாய் பொழிந்தருளும். என்றும் வாழ்பவரும் எல்லாம் வல்லவருமாகிய எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் திருமுகத்தைப் பார்த்து எங்களுக்குத் தந்தருளும் ஆமென்.

## 30.04.2019 புனித ஐந்தாம் பயஸ் திருப்பலி

**முன்னுரை**

திருமதி. ராணிவில்சன்

இறை இயேசுவின் நம்பிக்கையாளர்களே, திருப்பலியில் பங்கேற்று இறையாசீர் பெற வந்திருக்கும் உங்கள் அனைவருக்கும் வணக்கங்களும் விழா வாழ்த்துகளும். இன்றைய நற்செய்தி வாசகத்தின்படி சான்று பகரும் வாழ்வு வாழ்ந்தவர் இன்றைய விழா நாயகர் திருத்தந்தை புனித ஐந்தாம் பயஸ். இவர் இத்தாலி நாட்டில் அலெக்சாண்டிரியா நகருக்கு அருகில் கி.பி. 1504ம் ஆண்டு பிறந்தார். ஏற்ற வேளையில் தோமினிக்கன் குருத்துவ சபையில் சேர்ந்து குருப்பட்டம் பெற்றார். பிறகு ஆயராகவும் கர்தினாலாகவும் உயர்த்தப்பட்டு கி.பி. 1566ம் ஆண்டு திருத்தந்தையாகவும் உயர்த்தப் பெற்றார். திரித்தெந்தின் சங்கம் 16ம் நூற்றாண்டில் திருஅவையின் மாபெரும் நிகழ்ச்சியாக அது வரலாற்றுப் புகழ்பெற்றது. திரித்தெந்தின் பொதுச் சங்கம் மூலம் தீர்மானங்களை நிறைவேற்றுவதில் பெரும் சவாலைச் சந்தித்தார். துருக்கியரின் சீற்றத்தை எதிர்கொண்டார்.

குரு மடங்களுக்குள் பெரிய சீர்த்திருத்தங்களைக் கொண்டு வந்தார். திருத்தம் செய்த புதிய திருப்பலி நூலை வெளியிட்டார், புதிய திரித்தெந்தின் மறைக்கல்வி நூல் வெளியிட்டார். திருஅவையின் குறைபாடுகளைக் களைந்து அதற்கு முற்றுப்புள்ளி வைத்தார். உணவின்றி தவித்தோருக்கும், நோயுற்றோருக்கும் பல மருத்துவமனைகள் கட்டி மருத்துவ சேவையும் புரிந்தார். திருத்தந்தையாக இருந்தாலும் தன் சபை ஒழுங்குகளை விடாமல் கடைப்பிடித்து வாழ்ந்தார். நாமும் இவரின் வாழ்வைப் பின்பற்றுவோம். இயேசு நிக்கோதேமுவிடம் மறுபடியும் பிறக்க வேண்டும் என்று உரைத்த வார்த்தைக்கேற்ப, நாம் நமது பழைய வாழ்வைக் களைந்து புது வாழ்வுக்காகப் பிறப்போம், நம் புனிதரின் வாழ்வைப்பின்பற்றி வாழ வரம் வேண்டி இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. தாயும் தந்தையுமான இறைவா, எங்கள் தாய் திருஅவையின் திருப்பணியாளர்களான திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், அருட்பணியாளர்கள் இருபால் துறவறத்தார்கள் அனைவரும் தாங்கள் அழைக்கப்பட்ட அழைப்பில் புனித ஐந்தாம் பத்திநாதரைப் போல் திடமாகப் பற்றுறுதியோடு திருஅவையைப் புனிதத்தை நோக்கி நடத்திட அதற்கான அனைத்து வல்லமையையும் அளிக்க வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

2. அன்பு இறைவா, புனித ஐந்தாம் பயசைப் போல் எங்கள் குடும்பங்கள், அன்பியங்கள், இயக்கங்கள், பக்த சபைகள், இன்னும் உள்ள அத்தனை அமைப்புகளும் எத்தனை இடறல்கள், சவால்கள், சமூக விரோதிகள்

வந்தாலும், எதிர்கொண்டு உமது நம்பிக்கையில் வெற்றியடைய உமதருளைப் பொழிந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. இரக்கமே உருவான இறைவா, உலகிலுள்ள அனைத்து மக்களும் எந்த குறைபாடுமின்றியும், பேரிடர்கள் தாக்கி வாழ்வாதாரம் இழக்காமலும், சமய மோதல் ஏற்படாமல் நல்லிணக்கத்தோடும் ஒற்றுமை, சமாதானம், மகிழ்ச்சியோடும் வாழ அருள்புரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

# பகுதி - 2: விசுவாசத்தில் வளர...

## நம் வாழ்வில் இயேசுவின் உயிர்ப்பு

திரு. புல்லோன் ஜோ லூயிஸ்

மனுக்குலத்தினைப் புரிந்துக்கொள்ள முடியாத புதிர் மரணம். மனுக்குலத்தின் இயலாமையை முழுமையாக வெளிப்படுத்துவதும் இந்த மரணமே. மரணத்திற்குப்பின் என்ன இருக்கிறது என்னும் புதிர் இன்றுவரை பிறந்த அனைவரையும் பிரமிக்க வைத்துக்கொண்டே இருக்கிறது. நாம் அனைவரும் சாகாமல் இருக்கத்தான் விரும்புகிறோம். ஆனால் கடவுள் ஆதாமுக்குக் கொடுத்த சாபம், "நீ மண்ணாய் இருக்கின்றாய், மண்ணுக்கேத் திரும்புவாய்" (தொநூ 3: 19). கடவுள் மனிதனுக்குக் கொடுத்த சாபத்தைக் கிறிஸ்து தாமே ஏற்றுக்கொண்டு, அவரே மனித சாயலில் சாபத்திற்கு உள்ளானார். சிலுவையில் அறையுண்டு மரித்தார்.

இயேசுவின் சிலுவை மரணம், அவரது சீடர்களின் உள்ளத்தில் வெறுமையை ஏற்படுத்தியது. ஆனால் இறந்த இயேசுவின் உயிர்ப்பு, அவரது சீடர்களின் உள்ளத்தில் இருந்த மரணம் பற்றிய மனநிலையை மாற்றியது. இயேசுவின் உயிர்ப்பினைக் கண்டுணர்ந்து, அனுபவித்த சீடர்கள், இவ்வனுபவத்தைப் பிறரோடு பகிர்ந்து மகிழ்ந்தனர். இறப்பிற்குப்பின் உயிர்ப்பும், உயிர்த்த உடலுக்கான வாழ்வும் இருக்கின்றன என்ற உண்மையை இயேசுவின் உயிர்ப்பு இவ்வுலகிற்கு உணர்த்தியது. இந்த உயிர்ப்பு, விவிலிய வெளிப்பாடு, யூத சமயத்தாரும், இஸ்லாமியரும் இதனை ஏற்பர். ஆனால் பிற மதங்களில் மறுவாழ்வே உயிர்ப்பின் பொருளை உணர்த்துகிறது.

- ☐ இந்து சமயம் மறுவாழ்வினை "ஒன்றாகும் நிலை" என்கிறது
- ☐ புத்த சமயம் மறுவாழ்வினை "ஆசைகளின் கட்டுகளிலிருந்து விடுபட்ட நிலை" என்கிறது
- ☐ இஸ்லாம் சமயம் மறுவாழ்வினை "மகிழ்ச்சியான விண்ணகம்" அல்லது "தண்டனையான நரகம்" என்கிறது
- ☐ கிறிஸ்துவ சமயம் மறுவாழ்வினை "நித்திய வாழ்வு, நிறைவாழ்வு, இறைவனோடும், புனிதரோடும் உறவில் ஒன்றித்த ஐக்கிய வாழ்வு" என்கிறது

இறப்பிற்குப் பின்வரும் மறுவாழ்வே இவ்வுலக வாழ்க்கையை நீதி, நேர்மையுடன் வாழத் தூண்டுகிறது. இம்மறுவாழ்வின் நுழைவாயில் உடலின் உயிர்ப்பு. எனவே, இறப்பிற்குப் பின் நமது உடல் இறைவனின் இறுதித் தீர்ப்பிற்காக உயிர்த்தெழும். இந்த உண்மையை இயற்கையின் எதார்த்தங்களும், இறைவார்த்தைகளும் திருஅவையின் தந்தையர்களின் விளக்கங்களும் நமக்குத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன. கிறிஸ்து உயிர்த்தெழுந்ததை நேரிடையாகக் காணும் பாக்கியம் யாருக்கும் கிடைக்க வில்லை. ஆனால் ஒன்றிற்கு மட்டும் விதிவிலக்கு. ஆம், இயேசுவின் உயிர்த்தெழுதலைக் காணும்பேறு இரவுக்கு மட்டுமே கிடைத்தது.

"ஓ மெய்யாகவே பாக்கியம் பெற்ற இரவே, கிறிஸ்து உயிர்த்தெழுந்த காலத்தையும், நேரத்தையும் அறிய நீ மட்டுமே பேறுபெற்றாய் (பாஸ்கா புகழுரை). ஆனால் திருத்தூதர் யோவான் காலியாக இருந்த கல்லறை கூறிய செய்தியாகக் கூறுவது, "உயிரோடு இருப்பவரைக் கல்லறையில் தேடுவதேன்? அவர் அங்கே இல்லை. அவர் உயிருடன் எழுப்பப்பட்டார்" (லூக். 24:6). கிறிஸ்துவின் உயிர்ப்பு, நமது உயிர்ப்புக்கு ஓர் அச்சாரம், நாம் கல்லறையில் புதைக்கப்படுவதில்லை. மாறாக, விதைக்கப்படுகிறோம். "நாம் யாவரும் சாகமாட்டோம் ஆனால் அனைவரும் வேற்றுருப் பெறுவோம். அழிவுக்குரிய இவ்வுடல் அழியாமையை அணிந்தாக வேண்டும். சாவுக்குரிய இவ்வுடல் சாகாமையை அணிந்துக்கொள்ள வேண்டும் (1கொரி. 15: 51-53). உயிர்த்த ஆண்டவர் என்றும் நம்மோடு இருக்கிறார். "இதோ உலகம் முடியும் வரை எந்நாளும் நான் உங்களோடு இருக்கிறேன்" (மத்.26:20). இந்த மறுக்க முடியா மறக்க முடியா உண்மையை என்றும் நம்புவோம். ஆம், நம்பிக்கைக் கொள்வோம், கிறிஸ்துவில் நம் நம்பிக்கை வாழ்வு நான்கு தூண்களில் ஊன்றியுள்ளது.

- ☐ நம்பிக்கை அறிக்கையின் மூலமாய் அறிக்கையிடும் நம் நம்பிக்கை
- ☐ அருளடையாளங்களைக் கொண்டாடுவதன் மூலமாய் நம் நம்பிக்கை
- ☐ பத்துக் கட்டளைகளைக் கடைப்பிடிப்பதன் மூலமாய் நம் நம்பிக்கை
- ☐ கர்த்தர் கற்பித்த செபத்தின் வழியாய் நம் நம்பிக்கை

இவை நான்கும் நம் நம்பிக்கையின் பெரும் தூண்கள்.

புதிய ஏற்பாட்டில் முதல் பேறும், இறுதிப் பேறும் நம்பிக்கைகளைப் பற்றியது என்பது குறிப்பிடத்தக்கது. முதல்பேறு, "ஆண்டவர் உமக்குச் சொன்னவை நிறைவேறும் என்று நம்பிய நீர் பேறுபெற்றவர்" (லூக் 1:45) மரியா நம்பினார், நம்பிக்கையால் கருவுற்றார், உடலால் கருவுற்றார், உள்ளத்தால் கருவுற்றார். இறுதிபேறு "தோமா என்னைக் கண்டதால் நம்பினாய், காணாமலே நம்புவோர் பேறுபெற்றோர் (யோவா 20:29) நாம் கடவுளைக் காணாமலே அவரை நம்புகிறோம். "நீங்கள் அவரைப் பார்த்ததில்லை, எனினும் அவர்மீது அன்பு செலுத்துகிறீர்கள்" (1பேதுரு

1:8). முகக் கண்கொண்டு காண முடியாத கடவுளை அகக் கண்கொண்டு காண்கிறோம், மேலும் கிறிஸ்துவைக் காண்பது, கடவுளைக் காண்பதாகும் (யோவா 14:9).

தோமா கண்ணால் கண்டது கிறிஸ்து என்னும் மனிதனை. ஆனால் அவர் அறிக்கையிட்டதோ கிறிஸ்து என்னும் கடவுளை. "நீரே என் ஆண்டவர், நீரே என் கடவுள்" (யோவா. 20:28). நற்செய்தியில் தோமையாரைத் தவிர வேறு யாரும் கிறிஸ்துவை "என் கடவுளே" என்று அழைக்கவில்லை. "கடவுளிடமிருந்து பிறக்கும் அனைத்தும் உலகை வெல்லும், உலகை வெல்வது நம்பிக்கையே" (1யோவா 5:14). நம்பிக்கையின்றி இவ்வுலகை வெல்ல இயலாது. இந்த நம்பிக்கை என்பது நம்மோடு மட்டுமே நின்று விடுவதில்லை. உயிர்ப்பின் அனுபவங்கள் நம் அன்றாட வாழ்வின் நிகழ்வுகளாக மாறவேண்டும். நம்மோடு உடன் வாழ்வோர் நம்பிக்கையிழந்து வாழும்பொழுது, அவர்களுக்கு நம்பிக்கைத்தந்து நல்வழிப்படுத்தும்போது இந்த உயிர்ப்பின் அனுபவத்தை வழங்கும் இயேசுவின் மறுவுருவாகிறோம். அநியாயமாய் வாழ்வு நொருங்குண்டு, மானிட அடையாளமே இல்லாமல் வாழ்வதற்கான வழி தெரியாமல் இருப்போருக்கு நீதிக்கான குரல் எழுப்பி, வாழ்வின் திசைக்காட்டிகளாக மாறும்போது உயிர்ப்பின் அனுபவத்தை உணரமுடியும். உறவை இழந்து எதிர்காலமே சூனியமாகத் தோன்றும் இளைஞர்களுக்கு நல்வழிக்காட்டுவதன் மூலமாக உயிர்ப்பின் அனுபவத்தை மீண்டும் சுவைக்கலாம்.

தனிப்பட்ட வாழ்வில் பிறருக்கு இடறலாக இருப்பதைத் தவிர்த்து பாவ வாழ்வை விட்டுவிட்டு இறைவாக்கின்படி வாழ்வைக் கட்டியெழுப்ப பலரையும் தூண்டும்பொழுது இந்த உயிர்ப்பு அனுபவத்தைப் பெறலாம். குறை கூறுவதையும், குற்றம் காண்பதையும் நிறுத்திவிட்டு, பாராட்டுவதன்மூலம் மீண்டும் உயிர்ப்பின் அனுபவம் பெறலாம். நிறைவாழ்விற்கான மாற்றம் பெறலாம். ஆம், மனித வாழ்வின் ஒரு மாற்றமே இறப்பு. இந்த இறப்புக்குப் புதிய பொருள் தருவதும் புதிய அர்த்தம் படைப்பதும் உயிர்ப்பு, இறைவாக்குகளின் உன்னத நிறைவும் உயிர்ப்பு, இறைவார்த்தைக்கு உயிர் தருவதும் உயிர்ப்பு. உயிர்ப்பு இறந்தப்பின் கிடைக்கும் வெற்றிப் பரிசன்று, வாழும் மனிதனின் வாழ்வின் ஒவ்வொரு நிகழ்விலும், நித்தமும் நிகழும் நிம்மதியின் தோற்றம் என்பதை நம்புவோம், உயிர்த்த நம் இயேசு, நாமும் உயிர்ப்போம் என்ற நம்பிக்கையையும், நமக்கு மீட்பு கிடைத்து விட்டது என்ற நம்பிக்கையையும், நமக்கும் கடவுளுக்கும் உள்ள உறவு சாவுக்குப் பின்னும் தொடர்கிறது என்ற நம்பிக்கையையும் முழுமையாய் அளிக்கிறார். எனவே நம்பிக்கை இழந்தோர் வாழ்வில் நம்பிக்கையாக, உறவு இழந்தோர் வாழ்வில் உறவாக, மன்னிக்க முடியாதோர் வாழ்வில் மன்னிப்பாக மலர்வோம், மகிழ்வோம்.

# புனித ஐந்தாம் பயஸ் - வாழ்வு தரும் பாடம்

திரு. டே. ஆக்னல் ஜோஸ்

அன்பார்ந்தவர்களே, நமது கத்தோலிக்கத் திருஅவை ஏப்ரல் 30ந்தேதி திருத்தந்தை புனித 5ஆம் பயஸ் நினைவைச் சிறப்பிக்கின்றது. கத்தோலிக்கத் திருஅவையின் 225வது திருத்தந்தையாகப் பணியாற்றிய இவர், புனிதராக வாழ்ந்ததுடன் திரித்தெந்து பொதுச்சங்கம் கொணர்ந்த சீர்த்திருத்தங்களையும் நடைமுறைப்படுத்தினார். அவரது செயல்களே பிற்காலத் திருச்சபையில் நிகழ்ந்த பல சீர்த்திருத்தங்களுக்கு முன்னோடியாகத் திகழ்ந்தன. புனித 5ஆம் பயஸ், 1504 ஜனவரி 17ந்தேதி இத்தாலியின் லொம்பார்தி பகுதியில் பிறந்தார். திருமுழுக்கின்போது, அந்தோனியோ கிஸ்லியரி என்றப் பெயர் இவருக்கு வழங்கப்பட்டது. குழந்தைப்பருவம் முதலே பக்தியில் வளர்ந்த இவர், 14 வயதில் தோமிக்கன் சபையில் சேர்ந்தார். அது முதல் மைக்கேல் கிஸ்லியரி என்று அழைக்கப்பட்டார். அங்கு சிறந்த கல்வியும் குருத்துவப் பயிற்சியும் பெற்று, 1528ல் குருவானார்.

அக்காலத்தில் கத்தோலிக்கத் திருஅவையில் நிலவிய சீர்கேடுகளைக் கண்டித்தும், மரபு சார்ந்த கிறிஸ்தவ நம்பிக்கைகளுக்கு எதிராகவும் மார்ட்டின் லூத்தர் உள்ளிட்டோர் குரல் கொடுத்தனர். இதன் காரணமாக, ஐரோப்பா முழுவதும் பல பகுதிகளில் போராட்டங்களும் பிரிவினைகளும் நிகழ்ந்து கொண்டிருந்தன. இத்தகையச் சூழலின் நடுவிலும் விசுவாசத்தைக் காத்துக் கொண்டவராய் கிஸ்லியரி தமது குருத்துவப் பணியைத் தொடங்கினார். பதினாறு ஆண்டுகள் இறையியல் மற்றும் மெய்யியல் பேராசிரியராகப் பணியாற்றிய கிஸ்லியரி, விசுவாசம் மிகுந்த குருக்கள் உருவாகக் காரணமாக இருந்தார். கடுமையான செப, தவச் செயல்பாடுகளால் மற்றவர்களின் புனித வாழ்வுக்கு முன்மாதிரியாகத் திகழ்ந்தார். நோன்பு, ஆழ்ந்த தியானம், கடவுளைப் பற்றி மட்டுமே நண்பர்களுடன் உரையாடுதல் போன்ற பக்திக்குரிய செயல்களில் மிகுந்த விருப்பத்துடன் ஈடுபட்டு வந்தார்.

இதனிடையே, திருஅவையில் ஏற்பட்ட குழப்பங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கவும், பிரிவினையாளர்களின் குற்றச்சாட்டுகளை சீராய்வு செய்து முடிவெடுக்கவும் 1545ஆம் ஆண்டு திரித்தெந்து நகரில் பொதுச்சங்கம் ஒன்று கூடியது. திருச்சபையின் ஏழு அருளடையாளங்கள், புனிதர்கள் வணக்கம், உத்தரிப்பிடம் போன்ற மரபு சார்ந்த நம்பிக்கைகளில் தெளிவை ஏற்படுத்துவது குறித்து பொதுச்சங்கத்தில் ஆயர்கள் விவாதித்து வந்தனர். 1556ல் மைக்கேல் கிஸ்லியரியை சுத்ரி பகுதியின் ஆயராக திருத்தந்தை 4ஆம் பவுல் நியமித்தார். 1559ஆம் ஆண்டு, திருத்தந்தை 4ஆம் பயஸ் மொந்தொவி மறைமாவட்டத்துக்கு இவரை மாற்றம் செய்தார். தவறான போதனைகளை எதிர்த்து விசுவாசத்தைப் பாதுகாக்கும்

கிஸ்லியரியின் ஆர்வத்தைக் கண்ட 4ஆம் பயஸ், தப்பறைகளுக்கு எதிரான திருஅவையின் விசாரணை அதிகாரியாக இவரை நியமித்து கர்தினாலாகவும் உயர்த்தினார்.

1563ஆம் ஆண்டில், திரித்தெந்து பொதுச்சங்கம் முடிவுக்கு வந்தது. அதன் முடிவுகளை செயல்படுத்தும் முன்பே 1565ல் திருத்தந்தை 4ஆம் பயஸ் மறைந்தார். இந்நிலையில்தான், கர்தினால் மைக்கேல் கிஸ்லியரி திருஅவையின் 225வது திருத்தந்தையாகத் தேர்வு செய்யப்பட்டார். அப்போது 5ஆம் பயஸ் என்ற பெயரை இவர் ஏற்றுக்கொண்டார். பயஸ் என்ற வார்த்தை "பக்தி"யைக் குறிப்பதால், தமிழில் இவரை 5ஆம் பத்திநாதர் என அழைக்கிறோம். "உமது நீதிக்கேற்ப எனது பாதைகள் வழிநடத்தப்படட்டும்" என்ற விருதுவாக்கைக் கொண்டிருந்த திருத்தந்தை 5ஆம் பயஸ், எளிமையான துறவி போன்றே வாழ்ந்தார். பல்வேறு பணிகள் நடுவிலும் ஒரு நாளில் இரண்டு முறை நற்கருணை முன் செபிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார். எளிய மக்களுக்குத் தருமம் செய்வதில் ஆர்வம் காட்டினார், ஏழைகளின் பாதங்களைக் கழுவினார், மருத்துவமனைகளுக்குச் சென்று நோயுற்றவர்களைச் சந்தித்தார், தொழுநோயாளர்களைக் கட்டித் தழுவினார். திரித்தெந்து பொதுச்சங்கச் சீர்த்திருத்தங்களை செயல்படுத்துவதில், திருத்தந்தை 5ஆம் பயஸ் மிகுந்த ஆர்வம் காட்டினார். திருஅவை முழுவதற்குமான உரோமைத் திருப்பலி நூலை 1570ல் அறிமுகம் செய்தார். திருஅவையின் மரபில் தோன்றிய பல்வேறு தேவையற்ற விழாக்களைப் பட்டியலில் இருந்து நீக்கினார். 15 மறையுண்மைகளுடன் கூடிய முறையான செபமாலைப் பக்தியைக் கத்தோலிக்கத் திருஅவையில் அறிமுகம் செய்தவரும் இவரே.

1571ல் லெப்பந்தோ என்ற இடத்தில் துருக்கியருக்கு எதிராக நடைபெற்றப் போரில் கிறிஸ்தவ நாடுகள் ஒன்றிணைந்து செயல்பட ஏற்பாடு செய்தார். போரில் வெற்றிபெற உதவிய செபமாலை திருப்பவனியின் நினைவாக, "வெற்றியின் அன்னை" விழாவை அக்டோபர் 7ந்தேதி கொண்டாடும் வகையில் திருத்தந்தை 5ஆம் பயஸ் ஏற்படுத்தினார். இந்த விழாவையே நாம் தற்காலத்தில் "செபமாலை அன்னை விழாவாகக்" கொண்டாடுகிறோம். கத்தோலிக்கத் திருஅவையின் மரபுப்படி, ஏழு அருளடையாளங்களின் மாண்பையும் புனிதர்கள் வணக்கத்தின் தேவையையும் கிறிஸ்தவர்கள் புரிந்துகொள்ள 5ஆம் பயஸ் வழிவகுத்தார். புனித தாமஸ் அக்குயினாசை திருச்சபையின் மறைவல்லுநராக அறிவித்தவர் இவரே. திருச்சபையின் பதவிகளை உறவுமுறைப்படியும், பணம் கொடுத்தும் பெறுகின்ற வழக்கத்துக்கு நிரந்தமாக முடிவு கட்டினார். இவ்வாறு, கத்தோலிக்கத் திருச்சபையின் மாண்பைக் காக்க பல நடவடிக்கைகளை மேற்கொண்ட திருத்தந்தை 5ஆம் பயஸ், 1572 மே 1ந்தேதி இறைவனடி சேர்ந்தார். நூறு ஆண்டுகளுக்குப் பிறகு, 1672 மே 1 அன்று திருத்தந்தை 10ஆம் கிளமெந்த் இவருக்கு அருளாளர்

பட்டம் வழங்கினார். 1712 மே 24ந்தேதி திருத்தந்தை 11ஆம் கிளமெந்த் இவரை புனிதராக உயர்த்தினார். புனித 5ஆம் பயசின் உடல் இன்றளவும் அழியாமல் இருக்கிறது.

திருத்தந்தை புனித 5ஆம் பயசின் வாழ்வில் இருந்து நாம் மூன்று பாடங்களைக் கற்றுக்கொள்ள வேண்டும். முதலாவது, நற்கருணை ஆண்டவரைச் சந்திப்பதிலும், செபமாலைச் செபிப்பதிலும் நாம் எப்பொழுதும் ஆர்வமுள்ளவர்களாய் இருக்க வேண்டும். இரண்டாவது, கத்தோலிக்கத் திருஅவையின் மரபுகளை மதித்து நடப்பதுடன் கிறிஸ்தவ விசுவாசத்தை மங்கச் செய்கின்ற பாமர பக்திச் செயல்பாடுகளில் இருந்து விலக வேண்டும். மூன்றாவது, ஏழைகள் மற்றும் நோயாளிகளுக்கு உதவி செய்வதில் நமது விசுவாசத்தை வாழ்ந்து காட்ட வேண்டும். இதற்காக, புனித 5ஆம் பயஸ் நமக்கு உதவி செய்வாராக ஆமென்.

## புனித மாற்கு நற்செய்தியில் இயேசுவின் சுவடுகள்

திரு. பி. விக்டர்

மாற்கு நற்செய்தியை நமக்கு வழங்கியவர் புனித பவுலின் உதவியாளராக இருந்து பணிசெய்த "மாற்கு" என்பவர் ஆவார். இந்நூல் கி.பி. 64க்கும் கி.பி. 70க்கும் இடையில் உள்ள காலத்தில் எழுதப்பட்டு இருக்கலாம் என்பது பல்வேறு விவிலிய அறிஞர்களின் கருத்தாகும். இந்த மாற்கு நற்செய்திதான் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நற்செய்தி பணியை முதன்முதலாக உலகுக்கு அறிவித்தது. கிறிஸ்தவத்தின் தூண்களாய் இருந்த பேதுருவும், பவுலும் உரோமை நகரும் இரத்த சாட்சியாய் மரித்த பிறகு, விசுவாசிகளிடையே ஏற்பட்டிருந்த கலகத்திற்கும், நடுக்கத்திற்கும், நம்பிக்கையில் இருந்த சந்தேகத்திற்கும் விளக்கம் சொல்லும் விதமாக மாற்கு இந்நூலை எழுதியுள்ளார். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டிருந்த மக்கள் தாங்கள் கொண்டிருந்த நம்பிக்கையில் இன்னும் அதிகமாக ஊன்றியிருக்க வேண்டும் என்கிற நோக்கில் இந்நூல் மிகச் சுருக்கமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்நற்செய்தி யூதரல்லாத பிற இனத்து மக்களை முன்னிருத்தி அவர்களுக்கென்று எழுதப்பட்டுள்ளது.

இந்நற்செய்தி முழுவதும் "இயேசு கிறிஸ்து கடவுளின் மகன் என்கிற கருத்தும், நம் அனைவரின் மீட்புக்காகத் துன்புறும் மானிட மகன்" என்கிற கருத்தும் வலியுறுத்தப்பட்டிருப்பதைக் காணலாம். அதனால்தான் இயேசுவின் போதனைகளைவிட அவரது அருஞ்செயல்கள் அதிகமாகக் கூறப்பட்டுள்ளன. மற்ற நற்செய்தியாளர்கள் கூறாத ஒரு சில கருத்துக்களை மாற்கு நற்செய்தியாளர் தமது நூலில் கூறுவதிலிருந்து இயேசுவின் தனிப்பட்ட இயல்புகளை அறிய முடிகிறது. இயேசு தனது பணி வாழ்வின் துவக்கத்தில் 40 நாட்கள் உபவாசம் இருந்து செபித்தார். அவ்வேளையில் அலகையினால் சோதிக்கப்பட்டார், அவர் உபவாசம் இருந்ததோ ஒரு பாலைநிலம், அங்கு அவர் காட்டு விலங்குகளோடு

இருந்தார் என்று மாற்கு நற்செய்தியில் வாசிக்கின்றோம். இது மாற்கு நற்செய்தியாளர் இயேசுவைக் குறித்து கூறியுள்ள ஒரு சிறப்புத் தகவலாகும் (மாற்கு 1:13). ஒத்தமை நற்செய்திகளான மத்தேயு நற்செய்தியிலும், லூக்கா நற்செய்தியிலும் இத்தகவல் காணப்படாதது ஆச்சரியமாக உள்ளது.

அதுபோல இயேசு தனது 12 திருத்தூதர்களைத் தேர்ந்தெடுத்த பிறகு அவர்களில் யாக்கோபுக்கும், அவரது சகோதரர் யோவானுக்கும் "இடியைப் போன்றவர்கள்" என்று பொருள்படும் "பொவனேர்கேசு" என்கிற சிறப்புப் பெயரைச் சூட்டினார் (மாற்கு 3:17). இதன் மூலம் இயேசு இவ்விருவரிடம் கொண்டிருந்த அதிகப்படியான அன்பை உணர முடிகிறது. இதுவும் மற்ற நற்செய்தியில் காணப்படவில்லை. அடுத்து இன்னுமொரு சம்பவம், இயேசு குழந்தைகளைத் தொட்டு ஆசி வழங்க வேண்டும் என்று ஒருசிலர் தங்கள் குழந்தைகளை இயேசுவிடம் கூட்டி வந்தனர். இதைக் கண்ட சீடர்கள் இயேசு சற்றே ஓய்வு எடுக்கட்டும் என்கிற எண்ணத்தில் அவர்களை அதட்டினர். இயேசு தனது சீடர்கள்மீது கோபம் கொண்டு "சிறுபிள்ளைகளைத் தடுக்காதீர்கள், ஏனெனில் விண்ணரசு இத்தகையோருக்கே உரியது" (மாற்கு 10:14) என்று கூறி தனக்கு ஓய்வைவிட மக்களுக்கு ஆசி வழங்குவது பிடித்தமாக செயல் என்பதை விளக்குகின்றார். "சீடர்கள்மீது இயேசு கோபம் கொண்டார்" என்கிற வார்த்தைகள் மற்ற நற்செய்தியில் காணப்படவில்லை.

அதுபோலவே இயேசுவின் இன்னுமொரு செயல் சீடர்களைத் திகைக்க வைத்தது. ஆம், இயேசு தனது வாழ்வின் இறுதிப் பயணமாக எருசலேம் நகர் நோக்கி செல்கிறார். ஏற்கனவே எருசலேம் நகரில் எதிர்ப்புகள் இருந்ததால் அங்கு செல்ல வேண்டாம் என்கிற எண்ணத்தில் சீடர்கள் இருந்தனர். ஆனால் இயேசுவோ தனது வாழ்வின் இறுதியை உணர்ந்தவராய், தந்தையின் திருவுளம் நிறைவேற்றத் துடித்தவராய், எதைக் குறித்தும் கவலையில்லாதவராய் தனது பயணத்தைத் தொடர்ந்தார். இதுதான் சீடர்களைத் திகைக்க வைத்தது (மாற்கு 10:32). மற்ற நற்செய்தியாளர்கள் கூறாத இயேசுவின் தனிப்பட்ட இயல்புகளைக் கூறுவதால் மாற்கு நற்செய்தியாளர் வித்தியாசப்பட்டு நிற்கிறார். இதுமட்டுமன்று, இயேசு தனது வாழ்வில் வெளிப்படுத்திய மனிதாபிமான உணர்வுகளை மாற்கு நற்செய்தியாளர் மட்டும் நமக்குப் படம் பிடித்துக் காட்டுகின்றார். சூம்பிய கையுடையவனை ஓய்வு நாளன்று ஒரு வார்த்தையால் குணப்படுத்திய நிகழ்வின்பொழுது, ஓய்வு நாளில் செய்ததை மக்கள் ஏற்காததால் "இயேசு சினத்துடன்" அவர்களைச் சுற்றிலும் பார்த்தார் என்று இயேசுவின் கோப உணர்வை நற்செய்தியாளர் வெளிப்படுத்தியுள்ளார் (மாற்கு 3:5). மாற்கு நற்செய்தியாளர் இயேசுவை எந்தளவுக்கு அறிந்து, அனுபவித்து, பின்பற்றினார் என்பதை மேற்கூறிய நிகழ்வில் இருந்து நாம் அறிந்துக் கொள்ள முடிகிறது.

மாற்கு நற்செய்தி முழுவதையும் நாம் நோக்கும்பொழுது இயேசு கடவுளுக்கும் மனிதருக்கும் ஓய்வறியா பணியாளராய் வாழ்ந்து காட்டினார் என்பதை அறிந்துக்கொள்ளலாம். அவர் தனித்து செபிக்கும் நேரங்களில் கூட தொடர்ந்து செபிக்க முடியாதபடி பணிசெய்ய அழைக்கப்படுகிறார். விடியற்காலை கருக்கலில் எழுந்து தனிமையான இடத்திற்குப் புறப்பட்டுச் சென்றார். அங்கு அவர் இறைவனிடம் வேண்டிக்கொண்டு இருந்தார். சீமோனும், அவரோடு இருந்தவர்களும் அவரைத் தேடிச் சென்று, "எல்லாரும் உம்மைத் தேடிக்கொண்டு இருக்கின்றனர்" என்று கூறி அவரை அழைத்து வருகின்றனர் (மாற்கு 3: 35-37). மக்கள் கூட்டம் அதிகமாக இருந்தபடியால் உணவு உண்பதற்குக் கூட இயேசுவுக்கு நேரம் கிடைக்கவில்லை (மாற்கு 3:20). இப்படி எப்பொழுதும் ஓடியாடி ஓய்வு நேரமின்றி பணி செய்ததினால் இயேசுவின் உறவினர்கள் "இவன் மதிமயங்கித் திரிகிறான்" என என்று பேசத்தொடங்கினர் (மாற்கு 3:25). வேறு ஒரு சமயம், இயேசுவும் சீடர்களும் ஓய்வு எடுப்பதற்காக பாலை நிலத்திலுள்ள தனிமையான ஒரு இடத்திற்குச் சென்றனர்.

அவர்கள் படகேறி தனிமையான இடத்திற்குச் சென்றதைப் பார்த்த மக்கள் கூட்டம் இயேசுக்கு முன்னே அங்கு கூடிவிட்டனர். தனது ஓய்வு பறிபோனாலும் ஆயனில்லாத ஆடுகளைப்போல இருந்த அவர்கள்மீது இயேசு பரிவு கொண்டு அவர்களுக்கு பலவற்றைக் கற்பித்தார். ஐந்து அப்பங்கள் இரண்டு மீன்களைக் கொண்டு ஆண்கள் மட்டுமே 5000 பேர் கொண்ட பெருங்கூட்டத்திற்கு உணவளித்து அருஞ்செயல் செய்தார் (மாற்கு 6: 31-34). இயேசுவின் வார்த்தைகளை விவரிப்பதைப் பார்க்கிலும் இயேசு செய்த மகத்தான செயல்களை விவரிப்பதிலேயே மாற்கு நற்செய்தியாளர் மிகுந்த கவனத்தைச் செலுத்தியுள்ளார். அவரது மகத்தான வல்லமை மிகுந்த செயல்கள் அவர் கடவுளின் மகன் என்பதைப் பறைச் சாற்றுவதாக அமைந்துள்ளன. ஒருமுறை இயேசு சீடர்களும் படகில் பயணமாயினர். இயேசு படகின் பின்பகுதியில் தலையணை வைத்து அயர்ந்து தூங்கிக்கொண்டு இருந்தார். அவ்வேளை ஒரு பெரும் புயல் அடித்தது. பயத்தின் மிகுதியால் சீடர்கள் பெருங்கூச்சலோடு இயேசுவை எழுப்புகின்றனர். இயேசு விழித்தெழுந்து கடலை நோக்கி, "இரையாதே அமைதியாயிரு" என்றார். உடனே அமைதி உண்டாயிற்று. இதைக்கண்ட சீடர்கள் ஆச்சரியப்பட்டனர் (மாற்கு 4:35-40). "எப்பத்தா" என்று கூறி ஊமையையும் செவிடனையும் சுகப்படுத்தினார் (மாற்கு 7:34).

ஆடையைத் தொட்டவர்க்கும் சுகம் கொடுத்தார். 12ஆண்டுகள் இரத்தப்போக்கினால் பாதிக்கப்பட்ட பெண் ஒருவர் இயேசுவின் ஆடையைத் தொட்டாலே சுகம் பெறுவேன் என்று கூறி தொட்டாள். உடனே இரத்தப்போக்கு நின்றது, சுகமடைந்தாள் (மாற்கு 5:29). மரித்து பாடையில் போகவிருந்த "யாயீர்" என்கிற தொழுகைக் கூடத் தலைவனின் மகளுக்கு மீண்டும் உயிரளித்து அருஞ்செயல் செய்தார். இவ்வாறாக

மாற்கு நற்செய்தியாளர் இயேசு செய்த 19 அருஞ்செயல்களைத் தன்னுடைய நற்செய்தியில் எழுதிவைத்து இயேசு "வல்லமையுள்ள இறைவனின் மகன்" என்பதை ஐயம் தீர தெளிவுப்படுத்தியுள்ளார். இயேசுவின் பாடுகளை விளக்கமாக எழுதி இயேசு நம்மை மீட்பதற்காக வந்த மானிட மகன் என்பதையும் நிலைநாட்டியுள்ளார். இவ்வாறாக இயேசுவின் இறைத்தன்மையையும், மனிதத்தன்மையையும் அழகான உதாரணங்களால் உணர்த்தி இயேசுவை எல்லோரும் நம்ப வேண்டும், நம்பி அவரை நம் வாழ்வின் மீட்பராக ஏற்கவேண்டும் என்பதை மாற்கு நற்செய்தியாளர் எடுத்துரைக்கின்றார். இயேசுவே மெய்யான கடவுளின் மகன் இயேசுவே நம்மை மீட்க வந்த மானிட மகன் என்பதை ஏற்போம், இயேசுவின் சாட்சிகளாய் வாழ்வோம்.

## திருச்சபைச் செய்திகள்

சகோ. சுரேஷ் இயேசுபாலன் ச.ச.,

### தவக்காலம், எளிமையாக உண்மையாக வாழ்வதற்கு வாய்ப்பு

வெளித்தோற்றத்தில் கவனம் செலுத்துகின்றவர்கள், தங்களைப் பாவிகள் என ஒருபோதும் ஏற்க மாட்டார்கள். இந்த தவக்காலத்தில் நோன்பு, செபம், தர்மம் செய்தல் ஆகியவற்றைக் கடைப்பிடிப்பதன் வழியாக, வாழ்வின் எளிமையானத் தோற்றத்தைக் கண்டுபிடிப்பதற்கு முயற்சியெடுக்க வேண்டும் என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கேட்டுக்கொண்டார். ஒவ்வொருவரும் வெளிவேடம் போடுவதற்குச் சோதிக்கப்படுகிறோம் எனவும், உண்மையாக வாழாதவர், இளையோரிடம் நல்தாக்கம் ஏற்படுத்துவதில்லை எனவும் உரைத்த திருத்தந்தை, இயேசுவின் உயிர்ப்புப் பெருவிழாவை நோக்கிய இக்காலம், இந்த முரண்பாடுகளைக் கண்டறிவதற்கு ஏற்றது எனவும் கூறினார். எளிமையாக வாழ்வதன் அழகையும், எதார்த்தமான வாழ்வு, வெளித்தோற்றத்தோடு ஒன்றிணைந்து செல்ல வேண்டுமென்பதையும், இந்த தவக்காலத்தில் நாம் ஒவ்வொருவரும் கண்டுணர வேண்டுமென்று அழைப்பு விடுத்த திருத்தந்தை, நம்மால் இயன்றளவில் தாழ்மையுடன் முன்னேறிச் செல்வதற்கு ஆண்டவரிடம் அருள் வேண்டுவோம் என்று கூறினார்.

### பெண்கள் உலகை மேலும் அழகுறச் செய்கின்றனர்

பெண்கள் அதைப் பாதுகாத்து உயிர்த்துடிப்புள்ளதாக்கி வருகின்றனர். புதுப்பித்தலின் அருளைக் கொணர்கின்றனர். எல்லாரையும் இணைத்துக்கொள்கின்றனர் மற்றும் தங்களையே வழங்குவதற்கு துணிவு கொண்டுள்ளனர் என்ற வார்த்தைகள் திருத்தந்தையின் டுவிட்டரில் இடம் பெற்றிருந்தன.

### உலகில் 80% விழுக்காட்டினர் மத நம்பிக்கையுள்ளவர்கள்

உலக நலம், மனிதர் தாங்கள் உண்ணும் உணவு மற்றும் வாழும் முறையில் மாற்றம் கொண்டு வருவதைச் சார்ந்துள்ளது. உலக மக்கள்

தொகையில், ஏறக்குறைய எண்பது விழுக்காட்டினர், மத நம்பிக்கை உள்ளவர்கள் என்றும், உலகின் வளர்ச்சியில் மதங்களின் பங்கு இன்றியமையாதது என்கின்றனர். உலக மக்கள் தொகையில் 17.7 விழுக்காடு கத்தோலிக்கர். உலகெங்கிலும் வாழும் 740 கோடியே, 80 இலட்சம் மக்களில் 131 கோடியே 30 இலட்சம் கத்தோலிக்கர்கள் உள்ளனர்.

**பாலியல் முறைகேடுகளுக்கு எதிராக 8 பரிந்துரைகள்**

திருஅவைக்குள்ளும், திருஅவைக்கு வெளியிலும் காணப்படும் பாலியல் முறைகேடுகளை எதிர்த்து உறுதியுடன் போராட வேண்டிய தேவையைத் திருஅவை உணர்ந்துள்ளது - நிறுவனத்தைக் காப்பதைவிட சிறாரைக் காப்பது முதலிடம் பெறவேண்டும் என்ற மனநிலையைப் பெறுவது, திருப்பொழிவுப் பெற்றோரின் பாலியல் குற்றம் மற்றும் பாவச்செயலின் தீவிரத்தன்மைக்கு ஏற்ப செயல்படல், குற்றத்தை தூய்மைப்படுத்துதலை துவக்குதல், கற்பெனும் பண்பு குறித்து குருத்துவ மாணவர்களுக்கு நன்முறையில் கற்பித்து உருவாக்குதல், இத்தீமைகளுக்கு எதிரான சட்டங்களை மேலும் பலப்படுத்துவது குறித்து ஆயர் பேரவைகள் ஆராய்தல், பாலியல் முறைகேடுகளுக்கு உள்ளாக்கப்பட்டோருக்கு அக்கறையுடன் செவிமடுத்தல், பாலியல் ரீதியான இலக்கியங்களுக்கு, குருத்துவ மாணவர்களும், அருள்பணியாளர்களும் அடிமையாகாமல் இருப்பதை உறுதி செய்தல், உலகம் முழுவதும் நடைபெற்றுவரும் பாலியல் ரீதியான சுற்றுலாவை தடுத்தல் என்ற எட்டு பரிந்துரைகளைத் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் முன்வைத்தார்.

**"நானும் தீர்ப்பு அளிக்கவில்லை" மேய்ப்புப்பணி கையேடு**

"ஆண்டவரோடு 24மணி நேரங்கள்" என்ற இவ்வாண்டின் செபமுயற்சியின் மையப்பொருள் மன்னிப்பு. இந்த செபமுயற்சிக்கு உதவியாக மார்ச் 29ம் தேதி மாலை முதல் மார்ச் 30ம் தேதி முழுவதும், அனைத்து ஆலயங்களும் திறந்து வைக்கப்பட்டிருக்கும். செபமுயற்சிக்கு உதவும் நோக்கத்தில், புதிய வழியில் நற்செய்தி அறிவிப்பு திருப்பீட அவை, "நானும் தீர்ப்பு அளிக்கவில்லை" என்ற தலைப்பில், மேய்ப்புப்பணி கையேடு ஒன்றை வெளியிட்டுள்ளது. அனைத்துப் பங்குத்தளங்களும், திருஅவை குழுமங்களும், துறவற சபைகளும், இந்த செபமுயற்சியை சிறப்பாக நடத்துவதற்கு உதவியாக இந்த மேய்ப்புப்பணி கையேடு வெளியிடப்பட்டுள்ளது என புதிய வழியில் நற்செய்தி அறிவிப்பு திருப்பீட அவை கூறியுள்ளது.

**அரசியல் என்பது அதிகாரமன்று, மாறாக சேவை**

சமூகத்திலும் அரசியல் நிலைகளிலும் போராடும்போது ஒரு சீடத்துவ சமூகத்தின் அங்கத்தினர் என்ற உணர்வின்றியும், இறைவனின் அன்பை அனுபவிக்காமலும் இருந்தால் நல்ல அரசியல் பதவிகளைப்

பெற்றாலும், தனிமையும் சோகமுமே அங்கே தங்கியிருக்கும் என்று கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ். அரசியல் என்பது அதிகாரத்தை நிர்வகிப்பதன்று, மாறாக, சேவைக்கானது என்ற அப்புனிதரின் வார்த்தைகளைச் சுட்டிக்காட்டிய திருத்தந்தை, இலத்தீன் அமெரிக்க நாடுகளில் அரசியல் மற்றும் சமூகத் தலைவர்கள், நற்செய்தியின் மதிப்பீடுகளுடன் திருஅவை மேய்ப்பர்களுடன் இணைந்து பணியாற்றுவது குறித்தும் மகிழ்ச்சியைத் தெரிவித்தார்.

**அமைதிக்காக பாகிஸ்தான் இளையோரின் செபம், தவம்**

இந்தியா பாகிஸ்தான் அமைதிக்காக, தவக்காலம் முழுவதும் செபம் மற்றும் தவம் ஆகிய முயற்சிகளைத் துவங்கியுள்ள பாகிஸ்தான் இளையோர் "இயேசுவுக்காக பாகிஸ்தான் இளையோர்" என்ற பெயருடன் துவக்கப்பட்டுள்ள ஓர் இளையோர் இயக்கம், உலக அமைதிக்காக, குறிப்பாக, இந்தியா-பாகிஸ்தான் அமைதிக்காக, தவக்காலம் முழுவதும், செபம் மற்றும் தவம் ஆகிய முயற்சிகளைத் துவங்கியுள்ளதென்று பீதேஸ் செய்தியொன்று கூறுகிறது.

**கிறிஸ்தவ, முஸ்லிம் தலித்துகள், பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில்...**

இந்துமத தலித் மக்களைப் போன்று, கிறிஸ்தவ மற்றும் முஸ்லிம் தலித் மக்கள், அரசியல் முறைப்படியும், சட்ட முறைப்படியும் சம உரிமைகளைப் பெறவேண்டும். இந்தியாவில் கிறிஸ்தவ மற்றும் முஸ்லிம் தலித் மக்களை, பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்ப்பதற்கு உறுதி வழங்குவதை, அரசியல் கட்சிகள், தேர்தல் அறிக்கைகளில் சேர்க்குமாறு, இந்திய கத்தோலிக்கத் திருஅவைத் தலைவர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். புதுடெல்லியில் இந்திய கத்தோலிக்கர் ஆயர் பேரவையின் தலித் மற்றும் பிற்படுத்தப்பட்ட இனத்தவர் பணிக்குழு, நடத்திய கூட்டத்தில் இவ்வாறு அரசியல் கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இந்துமத தலித் மக்களைப்போன்று கிறிஸ்தவ மற்றும் முஸ்லிம் தலித் மக்கள், அரசியல் முறைப்படியும், சட்ட முறைப்படியும் சம உரிமைகளைப் பெறுவதற்கு இதுவே முக்கிய தருணம் என்றும், இந்த உரிமைகளின்றி தொடர்ந்து வாழ்ந்து கொண்டிருக்க முடியாது என்றும், அக்கூட்டத்தில் கூறப்பட்டது.

இந்தியாவில் வருகிற மே மாதத்தில் மக்களவைத் தேர்தல்கள் நடைபெற உள்ள வேளை இவ்வாறு வலியுறுத்தியுள்ள அப்பணிக்குழு, இந்திய அரசியல் அமைப்பில், 1935ம் ஆண்டில் உருவாக்கப்பட்ட சலுகையில், கிறிஸ்தவ மற்றும் முஸ்லிம் தலித் மக்களும் இணைக்கப்பட வேண்டும் எனக் கூறியுள்ளது. பிரிட்டிஷ் காலனி ஆதிக்கத்தில் மதத்தின் அடிப்படையில் எவரும் ஒதுக்கப்படவில்லை என்றும், 1950ம் ஆண்டின் குடியரசுத் தலைவர் விதிமுறையில்தான், கிறிஸ்தவ மற்றும் முஸ்லிம் தலித் மக்களுக்குச் சலுகைகள் மறுக்கப்பட்டன என்றும், இந்திய ஆயர் பேரவையின் தலித் பணிக்குழுவின் கூட்டத்தில் கூறப்பட்டது.

## சுடர் வாசகர் போட்டி - 57 சரியான விடைகள்

1. புனித பெர்பெத்துவா
2. இறைவனின் புனித யோவான்
3. குடும்பங்களின் பாதுகாவலர்
4. 203
5. 1986ஆம் ஆண்டு 6 ஆண்டுகள்
6. தவம், செபம், நோன்பு
7. புனித பெர்பெத்துவா மற்றும் பெலிசித்தா
8. போலந்து
9. மே 29ம் நாள்
10. சதுர்னியஸ், செதுந்தலுஸ், மற்றும் பெலிசித்தா
11. மரியாவின் "ஆம்" என்ற ஒத்துழைப்பு
12. ஆரியூஸ் தப்பறை
13. இறைவனின் புனித யோவான்
14. 1484ஆம் ஆண்டு காசநோய்
15. ஆயர் மாக்சிமூஸ்

### குலுக்கல் முறையில் பரிசு பெற்றவர்கள்

F. Ashika Irene, Sattur

Saral Mary, Pallikonda

A. Irudayaraj Perris, Chennai

## சுடர் வாசகர் போட்டி - 58

1. மாற்கு நற்செய்தியின் அடையாளச் சின்னம் எது?
2. "அரசியல் என்பது அதிகாரம் அல்ல மாறாக சேவை" கூறியது யார்?
3. 5ஆம் பயஸின் குழந்தைப் பருவ பெயர் என்ன?
4. 16ஆம் நூற்றாண்டில் திருஅவையில் நடந்த மாபெரும் சங்கம் எது?
5. மாற்கு யார் யாருடன் நற்செய்திப் பணியில் ஈடுபட்டு வந்தார்?
6. பெரிய சனியன்று நடக்கும் வழிபாடு எத்தனைப் பகுதிகளாக பிரிக்கப்பட்டிருப்பதாக ஆசிரியர் கூறுகிறார்?
7. புனித ஸ்தனிஸ்லாஸ் எந்த நகரத்து ஆயர்?
8. புனித பவுலோ நகர் பிரான்சிஸிஸின் பெற்றோர் எந்த புனிதரிடம் மன்றாடி இவரை பெற்றனர்?
9. பூமியையும், மனிதரின் உடல் நலத்தையும் பாதுகாக்க வந்தனா சிவா கூறிய பரிந்துரை என்ன?
10. பயஸ் என்ற வார்த்தை தமிழில் எதைக் குறிக்கிறது?
11. "நீ மண்ணாய் இருக்கிறாய் மண்ணுக்கே திரும்புவாய்" திருவிவிலியத்தில் எங்குள்ளது?
12. வெனிஸ் நகரத்து பாதுகாவலர் என்று போற்றப்படுபவர் யார்?
13. இயேசுவின் கல்லறையில் துணி சுருட்டிப் போட்டதன் அர்த்தம் என்ன?
14. திருத்தந்தை மார்ட்டின் கிறிஸ்துவின் இயல்புப் பற்றி திருஅவையில் சந்தித்தப் பிரச்சனை என்ன?
15. "சிறியோரின் சபை"யை ஆரம்பித்தவர் யார்?

**அன்பு நிறை வாசகர்களே!**

இந்த மாத "சுடர் வாசகர் போட்டி" பதில்களை ஏப்ரல் 20ஆம் தேதிக்குள் அனுப்பி வைக்கவும். சரியான பதில்களை எழுதி குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படும் மூன்று

பங்கேற்பாளர்களுக்குச் சிறப்புப் பரிசுகள் வழங்கப்படும்.
(சரியான முகவரியைக் குறிப்பிடவும்)

## அடுத்த சுடரில்

### பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி

தொழிலாளரான புனித யோசேப்பு
புனிதர்கள் பிலிப்பு, யாக்கோபு
உயிர்ப்புக் காலம் மூன்றாம் ஞாயிறு
புனித தோமினிக் சாவியோ
உயிர்ப்புக் காலம் நான்காம் ஞாயிறு
புனித பாத்திமா அன்னை
புனித மத்தியாஸ்
புனித லூயிஸ் ஓரியோன்
புனித லியனார்தோ முரியாள்தோ
உயிர்ப்புக் காலம் ஐந்தாம் ஞாயிறு
காசியா நகர் புனித ரீத்தா
புனித சகாய மாதா
உயிர்ப்புக் காலம் ஆறாம் ஞாயிறு
புனித கன்னி மரியா எலிசபெத்தைச் சந்தித்தல்

### பகுதி 2: விசுவாசத்தில் வளர...

புனித தோமினிக் சாவியோவின் வாழ்வு தரும் பாடம்
புனித மரிய டோமினிக்கா மசரெல்லோ - கடந்து வந்த பாதைகள்
விடுமுறை விவிலியப் பள்ளி ஒரு கண்ணோட்டம்
திருச்சபைச் செய்திகள்


**தீபகச் சுடர்**

**அன்பு வாசகர்களே!**

மாதம் தவறாமல் ஒரு பிரதியைப்பெற ஆண்டு சந்தா ரூ. 100/ செலுத்தி உங்கள் பெயரைப் பதிவு செய்துக் கொள்ளுங்கள்.

**தீபகம்**
தொன்போஸ்கோ மறைப்பணி மையம்
45, லேண்டன்ஸ் சாலை
கீழ்ப்பாக்கம், சென்னை-600 010.
தொலைப்பேசி: 044-26428162.

பெயர்:....................................
முகவரி:..................................
..........................................
..........................................
..........................................

## ஏப்ரல் மாதத்திற்கான திருப்பலி வாசகங்கள்

| தேதி | நாள் | திருநாட்கள் | வாசகம் | நற்செய்தி |
|---|---|---|---|---|
| 1 | தி | புனித ஹியூக் | எசா 65: 17-21 | யோவா 4: 43-54 |
| 2 | செ | பவோலா நகர் புனித பிரான்சிஸ் | எசே 47: 1-9 | யோவா 5: 1-16 |
| 3 | பு | புனித ரிச்சர்ட் | எசா 49: 8-15 | யோவா 5: 17-30 |
| 4 | வி | புனித இசிதோர் | விப 23: 7-14 | யோவா 5: 31-47 |
| 5 | வெ | புனித வின்சென்ட் பெரர் | சாஞா 2:1,12-22 | யோவா 7:1-2,10,25-30 |
| 6 | ச | திருத்தந்தை புனித முதலாம் செலஸ்தீன் | எரே 11: 18-20 | யோவா 7: 40-53 |
| 7 | ஞா | **தவக்காலம் ஐந்தாம் ஞாயிறு** | I. எசா 43: 16-21<br>II. பிலி 3: 8-14 | யோவா 8: 1-11 |
| 8 | தி | புனித ஜீலி பில்லியார்ட் | தானி 13: 1-9,15-17,30,33-62 | யோவா 8: 12-20 |
| 9 | செ | புனித வல்தேரியுதிஸ் | எண் 21: 4-9 | யோவா 8: 21-30 |
| 10 | பு | புனித புல்பேர்ட் | தானி. 3: 14-20,24,25,28 | யோவா 8: 31-42 |
| 11 | வி | புனித ஸ்தனிஸ்லாஸ் | தொநூ 17: 3-9 | யோவா 8: 51-59 |
| 12 | வெ | புனித ஜெம்மா கல்கனி | எரே 20: 10-13 | யோவா 10: 31-42 |
| 13 | ச | புனித முதலாம் மார்ட்டின் | எசே 37: 21-28 | யோவா 11: 45-56 |
| 14 | ஞா | **குருத்து ஞாயிறு** | I. எசா 50:4-7<br>II. பிலி 2: 6-11 | லூக் 22: 14-23: 56 |
| 15 | தி | புனித பெனடிக்ட் ஜோசப் லெபரே | எசா 42: 1-7 | யோவா 12: 1-11 |
| 16 | செ | புனித பெர்னடெத்தே லூர்து | எசா 49:1-6 | யோவா.13:21-33, 36-38 |
| 17 | பு | முத்திப் பேறுபெற்ற மேரி ஆணிசெடுஸ் | எசா 50: 4-9 | மத் 26: 14-25 |
| 18 | வி | **ஆண்டவரின் இரவு உணவு** | I. விப 12: 1-8, 11-14<br>II. 1கொரி 11: 23-26 | யோவா 13: 1-15 |
| 19 | வெ | **திருப்பாடுகளின் வெள்ளி** | I. எசா 52: 13-53:12<br>II. எபி 4: 14-16, 5:7-9 | யோவா 18: 1-19:42 |
| 20 | ச | பாஸ்கா திருவிழிப்பு | உரோ 6: 3-11 | லூக் 24: 1-12 |
| 21 | ஞா | **உயிர்ப்பு பெருவிழா** | I. திப 10: 34,37-43<br>II.கொலோ3:1-4, 1கொரி 5:6-8 | யோவா 20:1-9 |
| 22 | தி | புனித சோட்டர் | திப 2: 14, 22-23 | மத் 28: 8-15 |
| 23 | செ | புனித ஜார்ஜ், புனித அடால்பெர்ட் | திப 2: 36-41 | யோவா 20: 11-18 |
| 24 | பு | சிக்மரிங்கன் நகர் புனித பிதேலிஸ் | திப 3:1-10 | லூக் 24: 13-35 |
| 25 | வி | புனித மாற்கு | திப 3: 11-26 | லூக் 24: 35-48 |
| 26 | வெ | புனித அனாகிலேடஸ் | திப 4: 1-12 | யோவா 21: 1-14 |
| 27 | ச | புனித சீட்டா | திப 4:13-21 | மாற்கு 16: 9-15 |
| 28 | ஞா | **உயிர்ப்பு காலம் இரண்டாம் ஞாயிறு** | I. திப 5: 12-16<br>II. திவெ 1: 9-11, 12-13, 17-19 | யோவா 20: 19-31 |
| 29 | தி | சியன்னா நகர் புனித கத்தரீன் | திப 4: 23-31 | யோவா 3: 1-8 |
| 30 | செ | புனித ஐந்தாம் பயஸ் | திப 4: 32-37 | யோவா 3: 7-15 |
| | | | | |